விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 09 திங்கட்கிழமை (21.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 064



## பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மா காலமானார்

(வல்வெட்டித்துறை)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் தனது 81ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் வல்வெட்டித்துறை மருத்துவமனையில் காலமானார்.

நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த இரு வாரங்களாக தனது சுய நினைவுகளையிழந்து தீவிர சிகிச்சைக்கும் மருத்துவ பாராமரிப்புக்கும் உட்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுக் காலை காலமானார்.

பார்வதி அம்மாவின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. செவ்வாய்க்கிழமை காலை வரை பொது மக்கள் (20ஆம் பக்கம் பார்க்க)



## பிரச்சினை இல்லை என எவரும் நினைக்கக் கூடாது

# உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் புலிகளுக்கு ஆதரவு அளிக்கின்றன

## அமைச்சர் பீரிஸ் முழக்கம்

(கொழும்பு)

இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், ஈட்டப்பட்ட வெற்றியைப் பாதுகாக்க வேண்டியது அவசியமானதென வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவ ரீதியாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் புலிகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், (20ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதி அம்மாவின் மறைவுக்கு தலைவர்கள் இரங்கல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் மறைவுக்கு உள்ளூர் அரசியல் தலைவர்களும் தமிழக அரசில் தலைவர்களும் தமது இரங்கல் செய்திகளைத் தெரிவித்த வண்ணமுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் தமிழகத்தில் பழ.நெடுமாறன், வை.கோபாலசாமி, தொல்.திருமாவளவன், சீமான், கவிஞர் வித்தியாசாகர் உட்படப் பலரும் தமது இரங்கல் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

தமிழகத்தின் பல இடங்களிலும் பார்வதி அம்மாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை புலம்பெயர் தமிழ்மக்களும் தத்தம் நாடுகளில் பார்வதி அம்மாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

## நாடுகடந்த தமிழீழத்திற்கு நிதி சேகரிக்கப்படுகிறது

### ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் நிதி திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் மக்களிடம் நிதி திரட்டிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடுகடந்த தமிழீழ இராச்சியத்தில் தங்களை பதிவுசெய்து கொள்வதற்காக சகல புலம்பெயர் தமிழர்களும் தலா 15 அமெரிக்க டொலர்களை (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட 60 சபைக்கான தேர்தல் ஒத்திவைப்பு

### 24ந் திகதி தீர்ப்புக் கிடைத்தால் தேர்தல் நடக்கும்

(கொழும்பு)

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் 60 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெறாது என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 60 உள்ளூராட்சி சபைகள் உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு உரிய பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

FRANCE
Rs. 5/-
MY10 + 5 IDD இனை
செயற்படுத்த அழையுங்கள் 676
அல்லது ரு. 177/- ற்கு
ரீலோட் செய்யுங்கள்
Dialog

## பொன்சேகாவை இணைக்க பேச்சு நடத்துகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை ஐக்கிய தேசியக்கட்சியில் இணைத்துக்கொள்வது தொடர்பாக உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் சரத்பொன்சேகா பிரிவினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் உயரிய பதவியொன்று வழங் (20ஆம் பக்கம் பார்க்க)

## திருமாவளவன் யாழ் வருவார்

(சென்னை)

நாளை நடைபெறவுள்ள பார்வதி அம்மாளின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**
Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# வழக்கு தொடரப்படும் ஜே.வி.பி எச்சரிக்கை

(கொழும்பு)

அக்மீமன,அக்குரஸ்ஸ,மொனறாகலை பிரதேச சபைகள் மற்றும் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கு ஐ.ம.சு.மு மற்றும் ஐ.தே.க ஆகியன தாக்கல் செய்த வேட்புமனுக்களின் நிராகரிப்பு ரத்துச் செய்யப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க இது தொடர்பாக பேசுகையில் ,வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக ஐ.தே.க. தாக்கல் செய்த மனுக்களை வாபஸ் பெறுமாறு அவர் கோரிக்கை விடுத்தார். (ந-5)

வர்த்தகப் பெருமக்களே...
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## த.தே.ம. முன்னணி
# இரங்கல் செய்தி

(யாழ்ப்பாணம்)

தலைவர் வே.பிரபாகரனின் தாயார் அன்னை வேலுப்பிள்ளை பார்வதி அம்மா அவர்கள் எம்மை விட்டு பிரிந்துள்ளார். அவரது பிரிவுச் செய்தி உலகத் தமிழ் மக்களை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னையின் பிரிவிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ் மக்கள் அடிமை வாழ்வு நீங்கி சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக அன்னை யின் மகன் தன்னை அர்ப்பணித்தார். அத னால் அவர் தனது தாய்க்குரிய கடமைகளை ஆற்ற முடியவில்லை. அவரது சகோதரர்களும் தமது தாய்க்குரிய கடமைகளை ஆற்ற முடியாத நிலையிலுள்ளனர்.

இந்நிலையில் அன்னைக்குரிய கடமைகளை ஆற்றவேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு.தமிழ்த் தேசத்து மக்கள் அனைவரும் தங்களது அன்னையாக கருதி பார்வதி அம்மாவின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அன்னைக்கு இறுதி வணக்கம் செலுத்துமாறு வேண்டுகின்றோம். (ந)

# இலங்கை மீனவர்களும் கடற்படையும் எங்களுக்குக் கூட்டாகச் சதி செய்தனர்

## தமிழக மீனவர்கள் பரபரப்புப் பேட்டி

(சென்னை)

**இலங்கை மீனவர்களும்,இலங்கைக் கடற்படையினரும் கூட்டாக சேர்ந்தே தமிழக மீனவர்களைக் கைது செய்தனர் என இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு நாகை திரும்பிய தமிழக மீனவர்கள் தெரிவித்தனர்.**

நாகை,காரைக்கால்,புதுக்கோட்டை, இராமேசுவரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிறைபிடிக்கப்பட்டனர்.மத்திய,மாநில அரசுகள் மேற்கொண்ட தீவிர முயற்சியால் தமிழக மீனவர்களை இலங்கை கடந்த வெள்ளிக்கிழமை விடுவித்தது.விடுவிக்கப்பட்ட மீனவர்கள் சனிக்கிழமை காலை நாகை துறைமுகப் பகுதிக்கு வந்தனர்.அப்போது மீனவர்கள் இலங்கையில் தாங்கள் சிறைப்பிடிக்கப்பட்டது குறித்துக்கூறினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வரை இலங்கை மீனவர்களும்,இலங்கைக் கடற்படையினரும் தமிழக மீனவர்களை சிறைப் பிடிக்கத் தொடர்ந்து ரோந்து வந்து கொண்டிருந்தனர்.தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்களே தாக்குதல் நடத்தினர்.பெட்ரோல் குண்டு, கற்கள் ஆகியவற்றை வீசித் தாக்கினர்.

இலங்கை மீனவர்கள் அழைத்ததும் அவர்களுடன் சென்ற தமிழக மீனவர்கள் தாக்கப்படவில்லை.அவர்களிடமிருந்து தப்பிக்க முயன்றவர்கள் மீதே இலங்கை மீனவர்கள் கடும் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் ஈடுபட்ட இலங்கை மீனவர்களுக்கு பாதுகாப்பாக இலங்கைக் கடற்படையினர் செயல்பட்டனர்.

சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் வடமராட்சிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.பின்னர் அங்கிருந்து பருத்தித்துறை காவல் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காவல் நிலையத்துக்கு வந்து மீனவர்களைச் சந்தித்தார்.அப்போது நீங்கள் எல்லை தாண்டி வந்தது தவறுதானே என்றார்.மறுத்துப் பேச முடியாத நிலையில் நாங்கள் ஒப்புக்கொண்டோம். இதே கேள்வி,நீதி மன்றத்திலும் கேட்கப்பட்டது அங்கும் ஒப்புக்கொண்டோம்.

தமிழக மீனவர்களின் படகுகளிலிருந்து ஜி.பி.எஸ் கருவிகளையும்,மீன்களையும் இலங்கை மீனவர்கள் எடுத்துக் கொண்டனர். இதனால் ஒவ்வொரு படகுக்கும் சுமார் ரூ 50 ஆயிரம் வரை இழப்பு ஏற்பட்டது என அவர்கள் தெரிவித்தனர். (ந-5)

# துன்பம் வந்தபோதும் கலங்காதவர்

## பார்வதி அம்மா - நெடுமாறன்



(சென்னை)

**ஈழப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் கூட அங்கிருந்து வெளியேறி பத்திரமான இடம்தேடி பார்வதி அம்மாளும் அவரது கணவரும் வாழ முயலவில்லை. தங்கள் மக்களின் துயரத்தில் பங்கு கொண்டு அவர்களுடனேயே அத்தனை துன்பங்களையும் தாங்கி இறுதியாக இராணுவச் சிறையில் பல மாதங்கள் கொடுமைகளை அனுபவித்த போதிலும் அவர் கொஞ்சமும் கலங்கவில்லை.**

இவ்வாறு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான பழ.நெடுமாறன், பார்வதி அம்மாளின் மறைவையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைப் பெற்றெடுத்த அன்னை பார்வதி அம்மையார் நேற்று காலமான செய்தியை அறிந்து உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்.

சிறையில் தனது கணவரைப் பறிகொடுத்த துயரம் அவரது உடல்நிலையையும் மன நிலையையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கி விட்டது.இந்த நிலையில் அவர் வெளிநாட்டில் வாழும் அவரது மூத்த மகனும் அவரது மகள்களும் மற்ற நெருங்கிய உறவினர்களும் இலங்கை சென்று சந்தித்து ஆறுதல் கூற முடியவில்லை.

அவரை தமிழகம் கொண்டு வந்து அவரோடு நெருங்கிப்பழகிய குடும்பங்களோடு தங்க வைத்து மன ஆறுதலையும் மருத்துவ சிகிச்சையையும் அளிக்க செய்யப்பட்ட ஏற்பாட்டினை இந்திய தமிழக அரசுகள் மனித நேயம் கொஞ்சமும் இல்லாமல் முறியடித்தன.

தமிழகத்தில் வந்து இறங்கிய அவரை ஈவு இரக்கமில்லாமல் திருப்பி அனுப்பிய கொடுமையும் நிகழ்ந்தது.

இதெல்லாம் அவருடைய மனநிலையை மேலும் பாதித்துவிட்டது. இந்த சூழ் நிலையிலேயே மருத்துவ சிகிச்சை பயனளிக்காமல் அவர் காலமாகியிருக்கிறார் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தும் வகையில் இன்று மாலை 4 மணிக்கு உலகமெங்கும் உள்ள தமிழர்கள் கறுப்பு கொடி ஊர்வலங்கள்; இரங்கல் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந)

மாபெரும் மலிவு விற்பனை...
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்
மாபெரும் மலிவு விற்பனை எங்குமே காணாத அதிசிறப்புத் தள்ளுபடி
எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாபெரும் மலிவு விற்பனை எதிர்வரும் 27ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
பஞ்சாபிகள், கொட்டன் சாறிகள், பட்டுசாறிகள், சில்க்சாறிகள், பஞ்சாபி துணிகள் ஏராளம்! ஏராளம்!!
அலை அலையாக வாரீர்!
அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்!
இடம்:-நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக
நேரம்:-காலை 9.30 மணி முதல் 8 மணி வரை
வாடிக்கையாளர் நலன் கருதி பிரத்தியேகமான இடம் நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

(சி-2456)

**தேவை**
வடமராட்சியில் உள்ள கணனி நிறுவனம் ஒன்றிற்கு Ms office,DTP பயிற்றுவிப்பாளர், தட்டச்சு அனுபவமுள்ளவர் தேவை.
தொடர்பு: குளோபல் தகவல் தொழில்நுட்பம், மந்திகை,புலோலி.
T.P.: 0783035181
(385)

**சேவை முகவர்**
**வீடு, காணி விற்பனைக்கு**
கொழும்புத்துறை, மாட்டின் வீதி குறுக்கு லேன், சுந்தர்மடம், பழம் வீதி, மணல் தறை லேன், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரிவீதி, கோண்டாவில்,வைமன் றோட், பனிக்கர் லேன், உரும்பிராய் 9 பரப்பு, இருபாலை 45 பரப்பு ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு.யாழ்.நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:-சுந்தரம்,
0212229177, 0774819801
(3853)

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## ஆஸி.-சிம்பாவே இன்று சந்திப்பு



(அகமதாபாத்)

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு இது சோதனை மிகுந்த காலம். அடுத்தடுத்து தோல்விகள். இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் மட்டும் விதிவிலக்கு.

ரிக்கி பொன்டிங்கின் அணித் தலைவர் பதவி இப்போதோ, அப்போதோ என ஆட்டமாடிக் கொண்டிருக்கிறது. வரிசையாக மூன்று முறை உலகக்கிண்ணத்தை வென்ற அணி, இம் முறை தக்க வைத்துக் கொள்ளுமா? கோட்டைவிடுமா? என்பது உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

இந்த உலகக்கிண்ண தொடரின் பயிற்சி ஆட்டங்களில் இந்திய, தென்னாபிரிக்க அணிகளிடம் படுதோல்வியடைந்த நிலையில் தனது முதலாவது லீக் போட்டியில் இன்று சிம்பாவே அணியை எதிர்கொள்கிறது அவுஸ்திரேலிய அணி.

அகமதாபாத் சர்தார்பட்டேல் மைதானத்தில் நடக்கும் இந்தப் போட்டி அவுஸ்திரேலிய அணிக்கு அவ்வளவு கடினமாக இருக்காது காரணம், சிம்பாவே அணியின்நிலைமை அப்படி. ஏகப்பட்ட குழப்பங்களுக்கு இடையே வந்திருக்கிறது சிம்பாவே அணி.

பயிற்சி போட்டிகளில் பெற்ற தோல்விகளை மறந்து, இந்தத் தொடரின் முதல் வெற்றிக்காக தீவிர பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் அவுஸ்திரேலிய வீரர்கள்.

## அணி வீரரின் பெயரை மறந்த தோனி

இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் தோனி, தனது அணி வீரர் ஒருவரின் பெயரை மறந்து சங்கடத்திற்குள்ளான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதல் லீக் போட்டி பங்களாதேஷ், மிர்பூரில் நடைபெற்றது. பங்களாதேஷ், இந்திய அணிகள் மோதிய இப்போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பாகத் தொலைக்காட்சி வர்ணனையாளர் ரவி சாஸ்திரி கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் வேகப்பந்துவீச்சாளர் ஆஷிஸ் நெகராவின் பெயர் தோனிக்கு மறந்துவிட்டது. இப்போட்டியில் விளையாடும் இந்திய அணி வீரர்கள் யாரென ரவி சாஸ்திரி கேட்டபோது,

ரவிச்சந்திரன், பியூஸ், சுரேஷ் இவர்களுடன் மற்றொரு வீரரும் விளையாடமாட்டார் எனச் சிரித்துக்கொண்டே பதிலளித்தார் தோனி.

## பென்னட்டிடம் சிக்கியது கென்யா; நியூசிலாந்து அசத்தல் வெற்றி

(சென்னை)

பென்னட்டின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் நியூசிலாந்து அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கென்யா அணியை இலகுவாக வென்றது.

பத்தாவது உலகக்கிண்ண தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் ஏ பிரிவைச் சேர்ந்த நியூசிலாந்து-கென்ய அணிகள் மோதிய இரண்டாவது லீக் போட்டி நேற்று சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் பகல் ஆட்டமாக நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி ஆரம்பத்தில் நிதானப் போக்கைக் கடைப்பிடித்தது.

எனினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒபான்டா 6 ஓட்டங்களுடன் சௌத்தியின் பந்து வீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த வோட்டர்ஸ்-ஒபுயா ஜோடி பொறுப்புடன் ஆடியது.

*வந்தார் பென்னட்*

எனினும் மோட்டர்ஸ் 42 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 16 ஓட்டங்களை எடுத்த போது பென்னட்டின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரிகோலோ 2, ஒபுயா 16 ஓட்டங்களுடனும் ஒயுமா ஒரு ஓட்டத்துடனும் பென்னட் வெளியேற்றினார்.

அடுத்துவந்த வீரர்களையும் சௌத்தி, ஓரம் விரட்ட கென்ய அணி 23.5 ஓவர்களில் 69 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் பட்டேல் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் பென்னட் 5 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைமாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சௌத்தி, ஜேக்கப் ஓரம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சாய்த் தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 70 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி குப்தில்-மக்குலம் அதிரடியில் 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 72 ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் நியூசிலாந்து அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றிபெற்றது.

இதில் குப்தில் 32 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 39 ஓட்டங்களையும் பிரண்டன் மக்குலம் 17 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் சேர்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி தொடரில் 2 புள்ளிகளைப் பதிவு செய்தது.

இப் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு ஜொலித்த பென்னட் ஆட்டநாயகனாக தெரிவானார்.




## 'சொர்க்கா புரி'

இந்திய மைதானங்கள் துடுப்பாட்ட வீரர்களின் சொர்க்கா புரி என இலங்கை வீரர் திலான் சமரவீர தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண தொடர் குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, உலகக்கிண்ணத் தொடர் இந்திய துணைக்கண்டத்தில் உள்ள மைதானங்களில் நடைபெறுவதால் ஒவ்வொரு போட்டியிலும் 300 ஓட்டங்களை எட்டிவிடலாம் என தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கை மைதானங்கள் பெரிதாக இருப்பதால் பவுண்டரி அடிப்பது கடினம்.

இந்திய மைதானம் சிறியது. எனவேதான் இந்திய மைதானங்கள் துடுப்பாட்ட வீரர்களின் சொர்க்கா புரியாகவுள்ளது என்றார்.

### இன்றைய கேள்வி

உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில்

தொடர் நாயகன் விருது வென்ற இலங்கை வீரர் யார்?

........................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 23.02.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு Arrul Global Express வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

பெயர்:- ........................................

முகவரி:- ........................................

தொ.பே:- ........................................

தே.அ.அ.இல:- ........................................

அனுப்ப வேண்டிய முகவரி: 'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

### காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

1. ........................
2. ........................
3. ........................
4. ........................
5. ........................
6. ........................
7. ........................
8. ........................

பெயர்:- ........................................


முகவரி:- ........................................

தொ.பே:- ........................................

தே.அ.அ.இல:- ........................................

ஒலிம்பியா ஸ்போட்ஸ் இல06, ஜும்மா பள்ளிவாசல் லேன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3490, 0778010219, 0778060267

அனுப்ப வேண்டிய முகவரி: 'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



### உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?........................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?........................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்........................................

முகவரி........................................

தொலைபேசி........................................

தே.அ.அ.இல........................................

'உலகக்கிண்ணம்' வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.



ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம் 52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்



PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
T.P.021 2221101, 021 2229644
email:- pcsjaffna@sltnet.lk





வல்வை மகளிர் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட வல்வெட்டித்துறை கிராமசேவகர் சி.சிவபாலசிங்கம், வடமாகாண பாடசாலை மேம்பாட்டுத்திட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ்,இளைப்பாறிய வடமாகாண இலங்கை வங்கி முகாமையாளர் ந.சீவரத்தினம், திருமதி சீவரத்தினம், இளைப்பாறிய முன்னாள் அதிபர் திருமதி நர்த்தனசுந்தரம்,வித்தியாலய அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் திருமதி.எஸ்.நர்த்தனசுந்தரம் மங்கல விளக்கேற்றுவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

## அகில இலங்கை ஆசிரியர்கள் ஒன்றுகூடல் வைபவம்

இசுறுபாய கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி திணைக்களத்தினால் அகில இலங்கை ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தியமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

## விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்தும் பெண் நாய்களுக்கான கர்ப்பத் தடை மருந்தும் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை குடத்தனை மேற்கு, வலிக்கண்டி, மணற்காடு இடைத்தங்கல் முகாம் ஆகிய இடங்களிலும் நாளை செவ்வாய்க்கிழமை குடத்தனை கிழக்கு மடுமாதா கோயில், குடத்தனை உபதபால் நிலையம், மாளிகைத்திடல் பொது மண்டபம் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் புதன்கிழமை அம்பன் கிழக்கு, அம்பன் மத்தி, அம்பன் மேற்கு ஆகிய இடங்களிலும் வைத்து மேற்படி மருந்து வழங்கப்படவுள்ளது.

எனவே தடுப்பு மருந்து வழங்கப்படும் நிலையங்களுக்கு தங்கள் வளர்ப்பு நாய்களை கொண்டு வந்து தடுப்பு மருந்தைப்பெற்றுக் கொள்ளுமாறு அம்பன் பொது சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3)



யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் 'பிக்னல்' மைதானத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் மாணவரொருவர் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## அழகியல் பாட செய்முறைப் பரீட்சை

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அழகியல் பாட செய்முறைப் பரீட்சை கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலுள்ள பரீட்சை மையங்களில் நடைபெற்று வருகின்றன.


மத்திய கல்வி அமைச்சின் பரீட்சைத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட பரீட்சகரால் மேற்படி செய்முறைப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

இவ் அழகியல் பாடங்களில் இதுவரை தோற்றாத மாணவர்கள் தத்தம் பாடசாலை அதிபர்களிடம் அனுமதி அட்டைகளைப் பெற்று செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## மடிக்கணனி பெற்ற மாணவர்களுக்கு

சூரியப் பொங்கல் நிகழ்வின் போது ஜனாதிபதியால் வழங்கப்பட்ட மடிக்கணனியைப் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக புகுமாணவர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மேற்குறித்த மாணவர்கள் மடிக்கணனியுடன் சமுகமளிக்கும்படி மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)




## சமுர்த்தி நிவாரணம் மீளாய்வு நடவடிக்கை

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கான மீளாய்வு வேலைகள் சமுர்த்தி உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி நிவாரணம் பெறும் பொது மக்களுக்கான முத்திரைகள் இம்மாத இறுதியில் வழங்கப்படுமென சமுர்த்தி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## இலவச தேவார பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் சிவஸ்ரீ நமசிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிலைய அனுசரணையுடன் வட இலங்கை சங்கீத சபையினதும், அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானத்திற்கமைய இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பு கடந்த தைப்பூசத் தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பிரதி செவ்வாய்க் கிழமைகளில் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை இவ்வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.விரும்பிய மாணவர்கள், சிறியோர், பெரியோர், ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றி பயிற்சி பெறலாம்.

அத்தோடு இல்லறக் கொடை நிலையத்தில் மிருதங்க பயிற்சி, பாரதநாட்டிய பயிற்சி வகுப்புக்கள் யாவும் நடைபெற்று வருகின்றன.இவ்வகுப்புக்களிலும் பங்குபற்றி பயன் பெறுமாறு அறக்கொடை நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3)

## விபத்தில் யுவதி படுகாயம்

அளவெட்டியில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் யுவதியொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, அளவெட்டி கிழக்கு அளவெட்டியைச்சேர்ந்த ப.பவானி வயது (20) என்பவர் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மதிலுடன் மோதியதில் தலையில் பலத்த பாதிப்புடன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-6)

# இன்று ஒரு தகவல்

## குழந்தையின் உணவுப் பழக்கம்

''என்னுடைய குழந்தை சரியாகவே சாப்பிடுவதில்லை. அதை நினைத்தால் மிகவும் கவலையாக இருக்கிறது'' என்று கவலைப்படும் அம்மாக்கள் உண்டு.

குழந்தை நலநிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"என் குழந்தை இப்படிச் சாப்பிடவேண்டும். அப்படிச்சாப்பிட வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்'' என்று சொல்கிறார்கள்.

நாம் எதிர்பார்ப்பது போலவே குழந்தைகள் நடந்து கொள்ள வேண்டுமென்று கட்டாயமில்லை.

குழந்தைகளின் பசியென்று ஒரு குறிப்பிட்ட அளவுக் குட்பட்டது தான்.

குழந்தைகள் அதிகமாக விரும்பிச்சாப்பிடும் உணவு எப்படியிருக்கும் தெரியுமா?

அதிக எண்ணெய்ப்பசை இருக்கக் கூடாது. பார்ப்பதற்கு அழகாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணவைத்தான் குழந்தை அதிகமாக சாப்பிடும்.

சில தாய்மார்கள் குழந்தையின் மீதுள்ள ஆசையினால் தட்டு நிறைய ஆகாரத்தை நிரப்பிக் கொண்டு வந்து வைத்து விடுவார்கள்.

குழந்தை அதைப்பார்க்கும். உடனே அதற்கு என்ன தோன்றும் தெரியுமா?

''நிறையப்போட்டு நம்மைச் சாப்பிடச் சொல்லிக் கட்டாயப் படுத்துகிறார்கள்'' என்று தோன்றும்.

தட்டில் அளவாக ஆகாரத்தை வைத்துவிட்டு குழந்தையை பார்த்து,

"பார்த்தாயா? எல்லோரையும் விட உனக்குத்தான் கொஞ்சமாக போட்டிருக்கிறேன்'' என்று சொல்ல வேண்டும்.

இன்னொரு வழிகூட இருக்கிறது. தட்டு பெரிதாக இருக்கலாம். கொஞ்ச ஆகாரத்தை பெரிய தட்டில் வைத்துக் கொடுத்தால் பார்ப்பதற்கு குறைவாகத் தெரியும்.

குழந்தையும் மிரளாமல் சாப்பிடும்.

இன்னொருவிஷயம்.

ஒரு குழந்தை தனக்குப் பிடித்த ஆகாரத்தை தானே தேர்ந்தெடுப்பது போல் செய்ய வேண்டும்.

அதற்கு என்ன செய்யலாம் என்றால் முடியுமானவரை ஒன்றுக்கு மேற்பட்ட உணவு வகைகளை வைக்கலாம்.

உதாரணத்துக்கு இட்லியும் உப்புமாவும் வையுங்கள். எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும்.

சட்னியும் சாம்பாரும் வையுங்கள். எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும்.

சிலபேர் சாப்பிடும் போது குழந்தையை மிரட்டுவார்கள்.

''ஒழுங்காக சாப்பிடவேண்டும். இல்லையென்றால் பூச்சாண்டியிடம் பிடித்து கொடுத்து விடுவேன்'' என்று மிரட்டுவார்கள்.

இதெல்லாம் பிரயோசனப்படமாட்டாது. அதுவும் இந்தக் காலப் பிள்ளைகள் நம்மையே பிடித்துப் பூச்சாண்டியிடம் கொடுத்துவிடும். குழந்தை பயந்துவிட்டால் அது "டென்ஷனாக" மாறும். அதன்பின் அது பசியின்மையாக உருவெடுக்கும்.

அதற்குப்பின் இது சாப்பிடும் அளவு இன்னும் குறைந்து விடும்.

குழந்தை பிடிவாதமாக சாப்பிடமாட்டேன் என்று சொன்னால் அதனிடம் பேரம் பேசுவது கூட தப்பில்லை.

காய்கறிகளைச் சுத்தமாக சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடிக்கும் குழந்தைகளிடம் குறைந்தபட்சம் கரட் மட்டுமாவது சாப்பிடச் சொல்லலாம்.

ஒரு குழந்தை தான் எதைச் சாப்பிட வேண்டும் என்று தானே தீர்மானிப்பது மூலமாக அது தன் சுதந்திரத்தை நிலைநாட்ட முயல்கிறது.

அந்தச் சமயத்தில் நீங்கள் இதைச் சாப்பிடாதே, அதைச் சாப்பிடாதே என்று சொல்லிக் கொண்டிருந்தால் அதன் எதிர்ப்பு இன்னமும் அதிகமாகி விடும்.

வயிறு நிறைந்து விட்டது என்று சொல்லிவிட்டால் சரி என்று சொல்லுங்கள். இல்லை இல்லை இன்னும் கொஞ்சம் சாப்பிடு என்று சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

இதெல்லாம் குழந்தை நல நிபுணர்கள் நமக்கு சொல்லிக் கொடுக்கும் ஆலோசனைகள்.

ஒருத்தர் குழந்தை வளர்ப்பது எப்படி என்று ஒரு புத்தகம். எழுதினார். ரொம்ப பெரிய புத்தகம்.

அவருடைய நண்பர் ஒருத்தர் ஒரு நாள் அவரைத் தேடிவந்து சொன்னார்.

"நீங்க குழந்தை வளர்ப்பது எப்படி என்று ஒரு பெரிய புத்தகம் எழுதியிருக்கிறீர்களே... அது எனக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது'' என்றார்.

"அப்படியா?'' என்றார் இவர்.

''ஆமாம், தினமும் என்பையன் ஏதாவது தவறு செய்தால் அந்தப் புத்தகத்தால் தான் அவனை வீசி அடிக்கிறேன்''

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வட மாகாண முன்பள்ளிகளுக்கான முகாமைத்துவத்திட்ட கால்கோள்விழா

(அல்வாய்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப்பிரிவு நடத்தும் வடமாகாண முன்பள்ளிகளுக்கான முகாமைத்துவத்திட்ட கால்கோள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வட மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜா, யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# பயிற்சிக் கருத்தரங்கு

வேலணை நெடுந்தீவுக் கோட்ட பாடசாலைகளில் தரம் 3, 4, 5 இற்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் பயிற்சிக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வேலணை ஆசிரியர் நிலையத்தில் யாழ். பிராந்திய ஆசிரிய வளநிலையத்தின் வளவாளர்களினால் நடாத்தப்படவுள்ளதாக தீவக கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் க. கதிரேசுப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கிற்கு வருகை தரும் ஆசிரியர்கள் பாடநூல், பயிற்சிப்புத்தகம், ஆசிரியர் கைநூல் என்பவற்றைக் கொண்டு வருமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபரொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த வேளை இடையில் குறுக்கிட்ட துவிச்சக்கர வண்டியுடன் மோதுண்டதாலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கந்தரோடையைச் சேர்ந்த எ. சற்குணசிங்கம் (வயது - 57) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஸ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180-200 | 240 | 180 |
| உருளைக்கிழங்கு | 45 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 200-230 | 300 | 280 |
| தக்காளி | 130 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 110 | 150 | 120 |
| பூசணி | 60 | 80 | 50 |
| புடோல் | 70 | 140 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160-170 | 200 | 210 |
| பெரிய வெங்காயம் | - | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 200 | 140 |
| வெண்டிக்காய் | 100-110 | 180 | 100 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 60 |
| பயற்றங்காய் | 170 | 200 | 160 |
| லீக்ஸ் | 110 | 180 | 120 |
| பீற்றூட் | - | 140 | 120 |
| கறிமிளகாய் | - | 240 | 200 |
| போஞ்சி | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | - | 240 | - |
| கீரை - 1 பிடி | 5-10 | 30 | 20 |
| தேசிக்காய் | 30-40 | 70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 60-70 | 50 |

# இராசி பலன்

*21.02.2011*
*(மாசி 9, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*திருதியை காலை 7.53 மணிவரை*
*சதுர்த்தி பின்னிரவு 5.34 மணிவரை*
*அத்தம் முன்னிரவு 11.26 மணிவரை*
*இராகுகாலம் 8.01-9.31 மணிவரை*
*சுபநேரம் 12.31-2.01 மணிவரை*
*சங்கடஹர சதுர்த்திவிரதம்.*

**மேடம்** கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், மற்றவர் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை எளிதாக செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**இடபம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படும்.

**மிதுனம்** தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும், தாய்வழி உறவினர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும், நினைத்தகாரியம் நிறைவேறும்.

**கடகம்** வெற்றி வாய்ப்புக்கள் வீடு வந்து சேரும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறுவதுகண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**சிங்கம்** பொருட் சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும்.

**கன்னி** வரவிற்கேற்ப செலவு உருவாகும், குடும்பத்தினர் மனம் கோணாமல் நடப்பது நல்லது, உறவினர் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம்.

**துலாம்** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றியமைப்பீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வியக்கும் செய்தி வீடுவந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தினர் உங்களைப்புரிந்து கொண்டு நடப்பர், கௌரவமான நாள்.

**தனுசு** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பூர்வீகச் சொத்துக்களிலிருந்து இழுபறிகள் குறையும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**கும்பம்** குடும்பத்தில் சிறு மனக்கசப்புகள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தொழிலில் கவனம் தேவை, உடல்நலக் குறைவுண்டு.

**மீனம்** நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், இல்லதாரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் அந்நியோன்னியம் ஏற்படும்.

வளவன்

# கனடாவில் குடியேறியோர் எண்ணிக்கை கடந்தாண்டில் வெகுவாக அதிகரிப்பு

கனடாவில் குடியேறியவர்களின் எண்ணிக்கை முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் 2 இலட்சத்து 80 ஆயிரத்து 600 புதிய நிரந்தர வசிப்பாளர்கள் குடியேறியுள்ளனர்.

கடந்த 57 வருட காலத்தில் இந்தத் தொகை மிகவும் கூடியதாகும். கனடா அர சின் ஆகக் கூடிய இலக்கான 2 இலட்சத்து 65 ஆயிரத்திலும் பார்க்க இது ஆறு வீதம் அதிகமான தாகும் என்று கனடா குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள் ளார்.

நிரந்தர குடியேற்றத்துக்கு விண்ணப்பிக்கின்ற போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய 38 வகைப்படுத்தல்களை 2008இல் அவர் அறிமுகம் செய்தார். கனடாவுக்குள் பிரவேசித்து மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையில் வருடாந்தம் சராசரியாக 79 ஆயிரத்து 200 டொலர் வருமானம் ஈட்டுபவர்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையும் அறிவிக்கப்பட்டது. கனடாவில் வேண்டப்படும் தொழில் ஆற்றல் மிக்கவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் சில சலுகைகளும் அறிவிக்கப்பட்டன.

தொழில்சார் தகுதியுடைய வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் வெற்றிகரமாகச் செயற்படும் வகையில் மொழியறிவு அவர்களுக்கு கட்டாயமாக்கப்படவுள்ளது. இவ்வாண்டு பிற்பகுதியில் இவற்றை அமுலுக்கு கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆற்றல் மிக்க வர்த்தகத்துறையினருக்கு கனடாவில் அதிக கேள்வி இருப்பதால் அவர்களுக்கு இடமளிக்கும் வகையில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார். கடந்த ஆண்டு கனடாவுக்குள் அனுமதிக்கப்பட்ட குடியேற்றவாசிகளுள் மூன்றில் இரண்டு பங்கினர் பொருளாதாரக் குடியேற்றவாசிகளும் அவர்களில் தங்கியிருப்பவர்களும் ஆவர். மேலதிக 21 வீதமானவர்கள் குடும்பகையின் கீழ் வந்தவர்கள். இவர்கள் பெரும்பாலும் கனடாவில் நிரந்தரமாக வசிப்பவர்களின் வாழ்க்கைத் துணைகளும் வாரிசுகளும் 15ஆயிரத்து 322 பெற்றோரும் பாட்டன் பாட்டிமாரும் தங்களது குடும்பங்களோடும் இணைந்து கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 82ஆயிரம் தற்காலிக வெளி நாட்டு ஊழியர்களும் 96 ஆயிரத்து 147 வெளி நாட்டு மாணவர்களும் ஐக்கிய நாடுகள் அனுமதி பெற்ற 12 ஆயிரத்து 100 வெளிநாட்டு அகதிகளுக்கும் நாட்டுக்குள் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# புலமைப்பரிசில் பரீட்சையில் 114 மாணவர்கள் பெற்றது ஒரு புள்ளி மாத்திரமே

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்கு 330 மாணவர்கள் தலா 0 புள்ளியை பெற்றுள்ளனர்.

இரண்டாவது வினாத்தாளுக்கு 320 மாணவர்கள் தலா ஒரு புள்ளியைப் பெற்றுள்ளதுடன் இரு வினாத்தாளுக்கும் 114 மாணவர்கள் தலா ஒரு புள்ளியைப் பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.


இவர்களில் 79 பேர் சிங்கள மொழி மூல பரீட்சார்த்திகள் எனவும் ஏனையோர் தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் நாடு பூராவும் இருந்து 3 இலட்சம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ)

# இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த சில சக்திகள் முனைப்பு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பனை ஏற்படுத்த சில சக்திகள் முனைப்பு காட்டி வருவதாக வெளிவிவகார அமைச்சர்



ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொழில்சார் நிபுணர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது தொழில்சார் நிபுணர்களின் முக்கிய கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்த ரீதியாக தோற்கடிக்க முடியாது என்ற வலுவான நிலைப்பாட்டை படையினர் தகர்த்தெறிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து விட்டது இனி நாட்டில் பிரச்சினை இல்லை என எவரும் நினைத்து விடக் கூடாது எனவும் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற் சிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# இலங்கை வான் பரப்பில் ஆளில்லா விமானங்களை பறக்க விட அனுமதி

ஆள் இல்லா விமானங்களை இலங்கை வான் பரப்பில் பறக்க விட இலங்கை விமானப்படை அனுமதி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக கடந்த காலங்களில் ஆள் இல்லாத விமானங்களை பறக்கவிடுகின்றமைக்கு அனுமதி மறுக்கப்பட்டு இருந்தது.

விமானப்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இலங்கையில் நடைபெறும்போது பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடைமுறை என்பன திருப்திகரமான முறையில் மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் போட்டிகள் இடம்பெறும் பொழுது மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் அற்ற முறையில் தமது போக்குவரத் தினை மேற்கொள்ள முடியும் என போக்குவரத்து முகாமைத்துவ பொலிஸ்மா அதிபர் அசோக்கா விஜயதிலக தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போட்டிகளில் பங்கு கொள்ளும் அணிகளையும் விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் மைதானங்களுக்கும் விருந்தகங்களுக்கும் பொலிஸாரின் பாதுகாப்புடன் இட்டுச் செல்வர் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# நீண்ட ஆயுளுக்கு நார்ச் சத்துள்ள உணவுப் பொருட்கள் அவசியம்

நார்ச் சத்து நிரம்பிய உணவுப் பொருட்களை உண்ணுவதால் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவில் உள்ள தேசிய புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் நார்ச்சத்துள்ள உணவுப் பொருட்களின் பயன்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதில் நார்ச் சத்து நிரம்பிய உணவுப் பொருட்களை உண்பதால் நாம் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ முடியும் என தெரிய வந்துள்ளது.

ஆய்வுக் குழு தலைவர் யிக்வுங்க் பார்க் இது குறித்து கூறியதாவது, உடல் ஆரோக்கியத்திற்கும் உணவுப் பழக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதனடிப்படையில் நார்ச் சத்துள்ள உணவுப் பொருட்களை உண்ணும் நபர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.


அப்போது நார்ச் சத்து நிரம்பிய உணவை உண்பவர்கள் சராசரி நபர்களை விட நீண்ட காலம் உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வதாக தெரிய வந்தது. அதுவும் முழுமையான தானியங்களில் இருந்து கிடைக்கும் நார்ச் சத்து நம் உடலுக்கு மிகவும் பலனளிக்கிறது. இதன் மூலம் பன்மடங்கு நன்மைகள் ஏற்படுகின்றன.

இரைப்பை மற்றும் உணவுக் குழாய்களில் ஏற்படும் நோய்களுக்கு நிரந்தர தீர்வு காண நார்ச் சத்துள்ள உணவுப் பொருட்கள் உதவுகின்றன.

நீரிழிவு நோய், இதயம் தொடர்பான நோய்கள் மற்றும் புற்றுநோய் உள்ளிட்டவற்றை அறவே தவிர்க்க முடியும். நார்ச் சத்துள்ள உணவுப் பொருட்களை அதிகளவில் உண்ணும் போது இதயம் மற்றும் சுவாசம் தொடர்பான நோய்கள், தொற்றுநோய்கள் ஆகியவற்றுக்கான எதிர்ப்பு சக்தி நம் உடலில் உருவாகிறது.


இதனால் தேவையற்ற உயிரிழப்புகளும் தவிர்க்கப்படுகின்றன. இவ்வாறு யிக்வுங்க் பார்க் கூறினார். (ஸ்ரீ)







இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காரைநகர் கிளையின் தொண்டர்கள் கௌரவிப்பு விழா அண்மையில் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் காரைநகர் கிளைத் தலைவர் சோ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினத்திற்கு பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், பேராசிரியர் கா.குகபாலன், தலைவர் சோ. விக்னேஸ்வரன் ஆகியோர் மனித நேய ஈகையாளன் என்ற பட்டம் வழங்கி கௌரவிப்பத னையும் காரைநகர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சோமசேகரம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் பாராட்டுரை வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)



யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் மாணவர்களின் கலை நிகழ்வுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை கொடியினை அதிபர் ரி.எ.துரைசிங்கம் ஏற்றுவதையும் மாணவர்களின் அணி வகுப்பு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# பொருட்கள் மீதான விலையுயர்வு விரைவில் கட்டுப்படுத்தப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தின் தாக்கம் மற்றும் உலக சந்தையின் நிலைமை என்பன காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. இந்த அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தீர்வுகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கண்டி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் உரையாற்றுகையில், கிராமத்தை மேம்படுத்தவும் கிராம மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கவும் பணியாற்றிய விசேட யுகமாக தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் வரலாற்றில் பதியும் என்பதில் ஐயமில்லை.

கிராமத்தை மேம்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசின் வேலைத்திட்டத்திற்கு இந்த உள்ளூராட்சித் தேர்தல் பாரிய சக்தியாக அமையும் என நம்புகின்றேன்.

தனிநபர், குடும்பம், கிராமம், நாடு என்ற அடிப்படையில் நாட்டை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் வேலைத்திட்டமாகும். இவ் வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. இந்தப் பொறுப்புகளை உரிய முறையில் இனங்கண்டு அதற்கேற்ப சகலரும் செயற்பட வேண்டும். அதேநேரம் தனிப்பட்ட தேவைகளுக்கு அப்பால் கட்சியின் வெற்றிக்காகப் பொது நோக்கோடு சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம்.

இன்று கிராமங்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. நாட்டுக்கு சிறந்த வீதி கட்டமைப்பு கிடைக்கப் பெற்றிருக்கின்றது. 2012ஆம் ஆண்டாகும் போது நாட்டிலுள்ள சகல கிராமங்களும் மின் வசதியைப் பெற்றுக்கொள்ளும். அத்தோடு சகலருக்கும் இருப்பிடங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பாரிய வீடமைப்பு வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை எல்லா வீடுகளுக்கும் பொருளாதார அலகுகள் என்ற திட்டத்தின் கீழ் மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தையும் அரசாங்கம் செயற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சரியான முறையில் மக்கள் மத்தியில் கொண்டு சென்று மகிந்த சிந்தனையை வெற்றிபெறச் செய்து தாயகத்தைக் கட்டியெழுப்பவென அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் என்றார். (ஸ்ரீ)

## அதியுயர் பாதுகாப்பு வலயங்களை மட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வசதிகளை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் பலாலி அதியுயர் பாது காப்பு வலயத்திற்கு அருகில் உள்ள 256 வீடுகளில் பொதுமக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர மேலும் சில அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு அருகாமையில் உள்ள 2 ஆயிரத்து 392 இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்த எதிர்பார்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

## 2011.02 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1440 - புரூசியக் கூட்டமைப்பு உருவானது.

★1613 - முதலாம் மிக்கையில் ரஷ்யாவின் சார் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

★1804 - நீராவியால் இயங்கிய முதல் தொடரூந்து இயந்திரம் வேல்சில் இயக்கி சோதித்துப் பார்க்கப்பட்டது.

★1848 - கார்ல் மார்க்ஸ், பிரெட்ரிக் ஏங்கல்ஸ் தமது புகழ்பெற்ற கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்டனர்.

★1907 - நெதர்லாந்தில் எஸ்.எஸ்.பேர்லின் என்ற கப்பல் மூழ்கியதில் 125 பேர் கொல்லப்பட்டனர்.

★1918 - கடைசி கரலீனா பரக்கீட் என்ற பறவை சின்சினாட்டியில் இறந்தது.

★1937 - முதலாவது பறக்கும் தானுந்து வெற்றிகரமாகப் பறக்க விடப்பட்டது.

★1943 - இரண்டாம் உலகப் போர்: குவாடல்கனல் போர் முடிவுக்கு வந்தது.

★1947 - எட்வின் லாண்ட் முதலாவது உடனடி படம்பிடி கருவியை நியூயோர்க் நகரில் காட்சிப்படுத்தினார்.

★1960 - பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அனைத்து வியாபார நிறுவனங்களையும் அரசுடமையாக்கினார்.

★1963 - லிபியாவில் இடம்பெற்ற நிலநடுக்கம் ஒன்றில் 500 பேர் வரை கொல்லப்பட்டனர்.

★1965 - மல்கம் எக்ஸ் நியூயோர்க் நகரில் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1972 - சோவியத்தின் லூனா 20 சந்திரனில் இறங்கியது.

★1973 - சினாய் பாலைவனத்தில் இஸ்ரேல் போர் விமானம் லிபியாவின் பயணிகள் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதில் 108 பேர் கொல்லப்பட்டனர்.

★1974 - சுயஸ் கால்வாயின் மேற்குக் கரையில் இருந்து கடைசி இஸ்ரேலியப் படைகள் வெளியேறின.

### பிறப்புகள்

★1878 - அன்னை, இந்திய ஆன்மீகவாதி (இ.1973)

★1895 - கார்ல் பீட்டர் ஹென்ரிக் டாம், நோபல் பரிசு பெற்றவர் (இ.1976)

★1907 - எம்.ஆர்.ராதா, நகைச்சுவை நடிகர் (இ.1979)

★1924 - ரொபர்ட் முகாபே, சிம்பாவேயின் முதலாவது ஜனாதிபதி

### இறப்புகள்

★1889 - இன்னாசித்தம்பி, யாழ்ப்பாணம் சில்லாலை புகழ்பெற்ற சுதேச வைத்தியர்.

★1926 - ஹெயிக் ஒனெஸ், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர், (பி. 1853)

★1941 - பிரெடெரிக் பாண்டிங், நோபல் பரிசு பெற்ற கனேடியர் (பி. 1891)

★1965 - மல்கம் எக்ஸ், அமெரிக்க கறுப்பினத் தலைவர் (பி.1925)

★1968 - ஹோவார்ட் ஃபுளோரி, நோபல் பரிசு பெற்ற அவுஸ்திரேலியர் (பி.1898)

★1984 - மிகயில் ஷோலகொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர், (பி.1905)

★1999 - கேர்ட்ரட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர். (பி.1918)

*1952 - கிழக்கு பாகிஸ்தானின் டாக்காவில் வங்காள மொழியை அதி காரபூர்வ மொழியாக்கக் கோரி மாணவர் நடத்திய எழுச்சிப் போராட்டம் ஒன்றின் போது பொலிஸார் சுட்டதில் 4 பேர் கொல்லப்பட்டனர். இந் நாள் பின்னர் யுனெஸ்கோவினால் அனைத்துலக தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டது.*

# இலங்கையர்கள் பக்ரைன் நாட்டுக்குச் செல்லத்தடை

(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் பக்ரைன் நாட்டுக்கு வேலைவாய்ப்பு தேடி செல்கின்றமைக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தற்காலிகமாக தடை விதிக்கவுள்ளது.

பக்ரைன் விமான நிலையத்தில் ஏதேனும் அசௌகரியங்களை இலங்கையர்கள் எதிர்கொள்ளக் கூடும் என்பதால் ஒரு வாரம்வரை இவ்வேற்பாடு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

பக்ரைன் நாட்டு மக்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களை முடுக்கி விட்டு உள்ளனர். இதனால் அங்கு பாரிய வன்முறைகள் வெடித்துள்ளன. பொது மக்கள் ஐவர் கொல்லப்பட்டு இருக்கின்றனர். 200 பேர் வரை காயம் அடைந்துள்ளனர்.

பக்ரைனில் 10 ஆயிரம் பேர் வரையான இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும் ஆனால் இவ்வன்முறைச் சம்பவங்களில் இலங்கையர் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

# ஜனாதிபதி நிதிய புலமைப் பரிசில் திட்டத்தில் தெரிவானோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி.....)

**தென்மராட்சி வலயம்**

சி.உசாளினி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.பவித்திரா(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), இ.நிரோசன்(யா/மீசாலைவிக்னேஸ் வரா ம.வி), ம.நிஷாந் (யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி), சி.சிவவதனி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நே.பத்ம நாதன்(யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி), ந.நிதர்சனா (யா/உசன் இராமநாதன் ம.வி), பா.கிரிஸா (யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), த.திருமகள் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செ.ஜன்ஷா (யா/உசன் இராமநாதன் ம.வி), கு.கனேந்திரன் (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), அ.தர்மலா(யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), இ.தர்மிகா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இ.பானுப்பிரியா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),கு.மேனகா(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), த.கம்ஷாயினி(யா/கொடி காமம் திருநாவுக்கரசு ம.வி), சி.திசாந்தன் (யா/வரணி ம.வி), ஞா.மிதுனா(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), ப.கஜிதா(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி),பே.அனோஜன்(யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி), க.வேல்ராஜ்(யா/டிறிபேர்க் கல்லூரி),க.சுஜித்தா(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), சி.ஸ்ரீலக்கி(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), த.கவிஷா(யா/உசன் இராம நாதன் ம.வி),ந.தர்மதன்(யா/மீசாலை வீர சிங்கம் ம.வி), க.கிருத்திகா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

உ.சுகிர்தா(யா/வரணி ம.வி), கு.பிரதா பன்(யா/டிறிபேர்க் கல்லூரி), க.கவிப் பிரியா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கோ.தனுஜா(யா/சாவகச்சேரி இந்துக் கல் லூரி), இ.மிதுனா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெ. ஜெயர்த்திகா(யா/வரணி ம.வி), இ.சோபனா (யா/டிறிபேர்க் கல்லூரி), வ.சுகிர்தா (யா/வரணி ம.வி), செ.தர்சிகா (யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), உ.தினேஸ்குமார் (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), சோபிகா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யூ.ஜெனீ லா (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), வெ. நிரோகினி(யா/வரணி ம.வி), தி.ஆரணி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.கவிதா (யா/வரணி ம.வி), கு.கஸ்தூரி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),க.நிவேதா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),க.சஞ்சித்(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),ச.சலுசா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பொ.பர்சன்(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),கே.சுரெகா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கிருபாகரன்(யா/வரணி ம.வி), ஜெ.சாலனி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),க.தனுஜா(யா/நாவற்குழி ம.வி), இ.சோபிதா(யா/கைதடி முத்துக்குமார சாமி ம.வி),கி.நந்தினி(யா/கைதடி முத்துக் குமாரசாமி ம.வி), மு.தர்ஷிகா (யா/வரணி ம.வி),ம.கௌசி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கிருபாகினி (யா/வரணி ம.வி), செ.சர்மிலா(யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), க.பிரியதர்சனா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி.திருமாலன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.பகீரதன் (யா/வரணி ம.வி), இ.கேசவாணி (யா/சாவகச் சேரி இந்துக் கல்லூரி), அ.லவஞ்ஞா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.யசோதரன் (யா/சாவகச் சேரி இந்துக் கல்லூரி).

**தீவக வலயம்**

த.பவதாரணி ( யா/ வேலணை மத்திய கல்லூரி), பா.யமுனா (வேலணை மத்திய கல்லூரி), பி.நிரோஜன் ( யா/அனலைதீவு சதாசிவ ம.வி), கோ.கஜனா (யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), இ.சிந்துகா (யா/வேலணை மத்திய கல்லூரி),அ.றோயலா (யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்), ப.ஜனித்தா (யா/வேலணை மத்திய கல்லூரி),க.தயாபரன் (யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), உ.கிரிஷன் (யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), ந.நஜினி (யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி).

**வடமராட்சி வலயம்**

பி.ஜெயரூபன்(யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), ஏ.மேனகா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை),எம்.கிருஷா ளினி(யா/நெல்லியடி ம.ம.வி), கே.சிவச்சந் திரன்(யா/விக்னேஸ்வரா கல்லூரி), ஆர்.திவ் வியா(யா/விக்னேஸ்வரா கல்லூரி), ஜே.திவ்யா (யா/வடமத்திய மகளிர் கல்லூரி), ஆர்.ரவீந் திரராணி(யா/தொண்டைமனாறு ம.வி),வி.விஸ் ணுப்பிரியா(யா/விக்னேஸ்வராக்கல்லூரி), வி.ஆஷா(யா/நெல்லியடி ம.ம.வி), பி.லக்ஷிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.சுகனியா(யா/அம்பன் அ.மி.த.க.பாட சாலை, பி.பலரதி(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஆர்.நிஷானி(யா/மெத டிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.பாமினி(யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி),எம்.குமணன்(யா/விக்னேஸ்வரா கல்லூரி),ஜி.நிவேதா(யா/வடமத்திய மகளிர் கல்லூரி), ரி.தட்சாயினி(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),வை.நிவேதா(யா/வடமத்திய மகளிர் கல்லூரி),பி.பிரதீபா(யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி),எஸ்.ஜிவிந்தன்(யா/ஹாட்லி கல் லூரி), ரி.தர்ஷிகா(யா/உடுப்பிட்டி பெண்கள் கல் லூரி).

எஸ்.ஜேம்ஸ் பேகர் அத்தனாஸ் (நெல்லி யடி ம.ம.வி),ஆர்.றஜீவன்(யா/தேவரையாளி இந்துக் கல்லூரி),எஸ்.சங்கரி(யா/வடஇந்து மகளிர் கல்லூரி),எஸ்.ஆர்த்தியா(யா/நெல்லி யடி ம.ம.வி),பி.சிறாளன்(யா/வேலாயுதம் ம.வி),எஸ்.பிரசாந்(யா/ஹாட்லிக் கல்லூரி), ஏ.நிறோயன்(யா/நெல்லியடிம.ம.வி), பி.கௌதமி(யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), மா.சுபேஷ்(யா/நெல்லியடி ம.ம.வி), என்.நவ நீதன்(யா/தொண்டைமானாறு ம.வி), ரி.ஜெனிதா (யா/நெல்லியடிம.ம.வி).

ஜெ.சுலக்ஷன்(யா/தொண்டைமானாறு ம.வி),என்.பகீரதி(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை),என். தயாளினி(யா/விக்னேஸ்வரா கல்லூரி),ஆர். தட்சாயினி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எஸ்.உசேந் தினி(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),ஏ.ஞானமணி லக்காஸ்டால் (யா/நெல்லியடி ம.ம.வி),ரி.பாமினி(யா/நெல்லியடி ம.ம.வி), எஸ்.கண்ணன்(யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

கே.அபர்னா(யா/வடமத்திய மகளிர் கல் லூரி),ஏ.அமலின்ரா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை),ஏ.அபிரா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),ஜே. ஜெசிதா(யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), கே.அஞ்சுதா(யா/உடுப் பிட்டி அ.மி.கல்லூரி), எல்.திசாந்தன் (யா/நெல்லியடி ம.ம.வி),எஸ்.சர்மிளா (யா/வடமத்திய மகளிர் கல்லூரி), எஸ்.வைஸ் ண்வி(யா/வல்வை மகளிர் ம.வி),ரி.கவிப் பிரியா(யா/வல்வை மகளிர் ம.வி), வி.வினிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

ஏ.மயூரி(யா/வட இந்து மகளிர் கல்லூரி), சி.சுகிர்தா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை),ஜே.நிவேதா(யா/வட மத்திய மகளிர் கல்லூரி),ஆர்.நிசாந்(யா/ஹாட்லிக் கல்லூரி),பி.இந்துயா(யா/மெத டிஸ்த பெண் கள் உயர்தர பாடசாலை), எஸ்.திவாகர் (யா/நெல்லியடி ம.ம.வி), ரி.காயத்திரி(யா/உடுப் பிட்டி பெண்கள் கல்லூரி).ரி.துஷியந்தினி (யா/நெல்லியடி ம.ம.வி),யு.டுசாளினி (யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), வி.விஜிதா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட சாலை),பி. இசைவாணன்(யா/நெல்லியடி ம.ம.வி).

கே.சாமிலா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை), பி.பிரசாந்தினி(யா/உடுப் பிட்டி அ.மி.கல்லூரி), ஆர்.தர்ஷிகன்(யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி),எஸ்.குருநீலன் (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி),எஸ்.கௌதமி(யா/உடுப்பிட்டி பெண்கள் கல் லூரி),பி.பாலகௌரி(யா/வட மத்திய மகளிர் கல்லூரி), பி.பிரவீனா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

எஸ்.நிரோஜ்(யா/தேவரையாளி இந்துக் கல்லூரி),வி.றேனு(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), வி.முருகதாஸ்(யா/ஹாட் லிக் கல்லூரி), எஸ்.சத்தியா (யா/வட இந்து மக ளிர் கல்லூரி),ஏ.டென் சியா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) எஸ்.சுகிர்தனா (யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை).

கே.நிதர்சனா(யா/வட இந்து மகளிர் கல்லூரி),எம்.மேரிதர்ஷிகா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஆர்.ஜனதன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ஆர்.நிஷாந்தினி(யா/விக்னேஸ்வரா கல்லூரி), எஸ்.சுகன்யன்(யா/ஹாட்லிக் கல்லூரி),ரி.சாளினி(யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி).

பி.மாதங்கி(யா/வட இந்து மகளிர் கல் லூரி),பி.ஸ்ரீலக்ஷியா(யா/வட மத்திய மகளிர் கல்லூரி),ரி.தர்ஷிகா(யா/நெல்லியடி ம.ம.வி),எல்.நிதர்ஷன்(யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி).

ஆர்.றபெட்னா(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),வி.விஜயதீபா(யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ஏ.சரண்யா(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வை.கௌதமி(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஆர். துஷ்ய ந்தன்(யா/ஹாட்லிக் கல்லூரி), ஏ.றொசானி (யா/மெத டிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.இலக்கியா(யா/உடுப் பிட்டி மகளிர் கல்லூரி). ஏ.அர்ச்சனா(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

ஜே.அர்ச்சுதன்(யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), ஆர்.சிவரூபன்(யா/வேலாயுதம் ம.வி),எஸ்.சைலயா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

எஸ்.சிவமோகன்(யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ரி.கௌசிகன்(யா/நெல்லியடி ம.ம.வி), வி.யசோதரன்(யா/ஹாட்லிக் கல்லூரி), வை.அஞ்சலா(யா/தேவரையாளி இந்துக் கல்லூரி),கே.சர்மிலாதேவி(யா/உடுப் பிட்டி பெண்கள் மகளிர் கல்லூரி)

(நாளை தொடரும்)






காரைநகர் தேசிய சேமிப்பு வங்கியில் கடந்தவாரம் தன்னியக்க பணப் பரிமாற்று இயந்திரம் வாடிக்கையாளர் சேவைக்காக திறந்து வைக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் அ.கங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப் படுவதனையும் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ் ப்பாண கிளை முகாமையாளர் வி. அருளானந்தம் மங்கல விளக்கேற்றுவதனையும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர அலுவலகத்தினை சம்பிரதாயமாக நாடா வெட்டி திறந்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

# கள்ளிக்காட்டு



45



கவிப்பேரரசு வைரமுத்து

ஊருக்கெல்லாம் ஒரேஒரு குடி தண்ணீர்க்கிணறு; பொதுக்கிணறு. அதைப் பொதுக்கிணறுங்கிறது ஒரு பேச்சுக்குத்தானே தவிர அதுல ரெண்டு மூணு பகுதிக்காரங்க மட்டும் தண்ணி யெடுக்க முடியாது. தோல் தைக்கிற வீடு- சலவை பண்றவீடு- சவரம் பண்றவீடு- வெட்டியான் வீடு- இந்த வீட்டுப் பொம் பளைகள்ளாம் அந்த உருளையில சகடை போட்டு இறைச்சுற முடியாது. தண்ணிக் கிணத்தோரமாக் கொடத்த வைச்சுக் குத்தவைச்சு ஒக்காந்திருப்பாக. தண்ணி எறைக்க வர்ற பொம்பளைகள்ள யாரோ ஒரு இரக்கமுள்ள மகராசி தன் குடத்த நிறைச்சுட்டு அவுக குடத்தையும் நிறைச் சுட்டுப் போவா. அன்னன்னைக்கு அந்த மகராசி யாருங்குறது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

அன்னைக்கு ஒருநாள் பொழுதுசாய ஒழவு மாட்ட ஒட்டிக்கிட்டுப் பேயத் தேவர் தண்ணிக் கிணத்தத் தாண்டிப் போறப்ப முருகாயி மட்டும் ஒரு ஓரமா- கவலையா ஒக்காந்திருந்தா. அன்னைக்கு எல்லாப் பொம்பளைகளும் தண்ணியெ டுத்துட்டுப் போயிட்டாளுக. ஒரு பொம் பளையையும் காணோம். அவ பிஞ்சு மொகத்துல ஒரு கவல ஆணி அடிச்சுக் கூடாரம் போட்டு ஒக்காந்திருந்துச்சு. விஷயம் வெளங்கிப் போச்சு பேயத் தேவருக்கு. கலப்பையில சுத்தியிருந்த வால்கயித்த சரசரன்னு அவுத்துக்கிட்டு விறுவிறுன்னு வந்தாரு. அவ தகரக் கொடத்தப் புடுங்கி வாய் வளையத்துல வால்கயித்தக் கட்டி எறக்கிட்டாரு உள்ள. 'அய்யய்யோ! இது ஆபத்தாச்சே'ன்னு முரு காயி கலவரப்பட்ட நேரத்துல வந்து சேந் தாய்யா வைரக்கண்ணு பொண்டாட்டி. "யாத்தே! யப்பே இந்த அசிங்கத்த எங்க போயிச் சொல்ல? தண்ணி தீட்டுப்பட்டா நாம பொறுத்தாலும் சாமி பொறுக் குமா?"ன்னு கத்தி ஊரக் கூட்டிட்டா.

தப்புத்தான். பெரியதேவரு மகன் பேயத் தேவன் பண்ணினது தப்புத்தான். இதுக்கு என்னடா பரிகாரம்ன்னு ஊர்ப்பஞ்சாயத்து கூடி யோசிச்சு தெகட்டலான தீர்ப்புச் சொல்லுச்சு. தீட்டுப்பட்ட கிணத்துத் தண்ணிய பேயத்தேவன் ஒரு துளிகூட இல்லாம ஒத்த ஆளா நின்னு எறைச்சுக் குடுத் திடறது. முருகாயி வீட்டு ஆளுகளுக்கு ஒரு மாசம் தண்ணி ஊத்தாம ஊரே ஒதுக்கி வைக் கிறது.

சாமியப் பகைச்சாலும் சாதிசனத்தப் பகைக்க முடியுமா? ஒத்தஆளா நின்னு விடியவிடிய ஒரு பொட்டுத் தண்ணி இல்லாம எறைச்சு முடிச்சாரு பேயத்தேவரு. கிணத்துலயும் தண்ணி வத்திப் போச்சு; ஒடம்புலயும் வேர்வை வத்திப்போச்சு. வத்தாமப் போனது பாதகத்தி முருகாயி பால்பாலா வடிச்ச கண்ணீர் மட்டும்தான்.

பொதுவாகவே மனிதர்களுக்கு ஒரு குணம் இருக்கு. அவனவன் குற்றம்குறை பூசணிக்காயளவு இருந்தாலும் அதைச் சுண்டைக்காய் என்று சொல் லித்திரிவது. அடுத்தவர்களின் குறை சுண்டைக் காயளவு இருந்தாலும் அதைப் பூசணிக்காய் என்று புலம்பித் திரிவது. அதில் ஒரு சுகமும் பாதுகாப்பும் இருப்பதாக நாலுகால் மனசு நம்புகிறது.

சுடுகாட்டைக் கடந்து போகிறவன் தன் பயத்தை மறக்கச் சத்தம் போட்டுக்கொண்டே போவது மாதிரி தன் குறையை மறைக்க அடுத்தவர்களின் குறைகளையே அசைபோடுகிறது மனுசக்கூட்டம்.

இது ஊர் ஊருக்கு- ஆள் ஆளாளுக்கு- தேசத் துக்கு தேசம் முன்னப்பின்ன இருக்குமே தவிர முற் றிலும் ஒழிக்க முடியாத குரங்கு ஜாதிக்குணம்.

ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்குகிற

# இதிகாசம்

கிராமம் 'பேயத்தேவர்- முருகாயி' விவகாரத்தைத் தன் கடைவாயில் அதக்கி அதக்கி அசைபோட்டது.

உழவுகாட்டில்- களை எடுப்பில்- கருதறுப்பில்- அம்பலக்கல்லில்- தண்ணிக்கெணத்தில் இதை விட்டால் வேறு பேச்சில்லை.

"ஆளப் பாத்திருக்கியா? சாதிக்குதிரை"

"தேசிங்குராசா அடக்கமுடியாத குதிரையத் தேவர் மகன் அடக்கிட்டானாய்யா"

-இது அம்பலக்கல்லில் பீடி குடிச்சுவுக பத்தவச்ச நெருப்பு.

களையெடுக்குற பொம்பளைக பேசிக்கிட்டாக.

"ஏ வெடச்ச மூக்கி! வெரசாக் (விரைவாக) களையெடுங்கடி!வீட்டுக்குப் போகணும்"

"எதுக்கு அனத்திக்கிட்டேயிருக்கவா? புள்ள அழுகுதா? புருசன் அழுகுறானா? போயி என்ன பண்ணப் போறவ"

"நாந்தான் ஒல வைக்கணும். நாந்தான் கஞ்சி காய்ச்சணும். நாந்தான் தண்ணிக்குப் போகணும்"

"தண்ணிக்கும் நீயா போற?"

" நான் போகாம...? நான் என்ன பேயத் தேவனையா வச்சிருக்கேன்- எனக்கு யாராச்சும் தண்ணி எறைச்சு ஊத்துறதுக்கு?"

எல்லோரும் 'காச்மூச்'சென்று சிரித்ததில் களை யெடுப்புப் பிந்தியது.

இப்படி ஊருக்குள் கசகசவென்று பேச்சுப்பரவிய காலத்தில் ஒருநாள் வீட்டுவாசலில் தெருவில் ஒரு குத்துக் கல்லில் உட்கார்ந்து தீட்டுக்கட்டையில் அருவா தீட்டிக் கொண்டிருந்தார் பேயத்தேவர்.

வேப்பங்கட்டை வேலங்கட்டையைவிட வெக் காலிக் கட்டைதான் அருவாளத் தீட்ட வசதி.

வெள்ளக்கல்லப் பொடிப்பொடியா அடைச்சுக் குருணைபண்ணி, வெக்காலிக் கட்டைமேல 'சள்' ளுன்னு தெளிச்சு, புடிய வலது கையிலயும் அருவா நுனியை எடது கையிலயும் புடிச்சு ஒரு சைசா சாய்ச்சு, ஆளோட சக்திக்குத் தக்கன அழுத்தித் தீட் டினா சும்மா கதகதகதன்னு பதம் ஏறும். இரும்பு அருவா ஈயச்சிரிப்புச் சிரிக்கும். திருப்பித் தீட்டு றப்ப புடி இடது கையிலயும், நுனி வலது கையில யுமா அழுத்தித் தீட்டனும், அருவா அழுத்தற அழுத் தத்துல குருணைக் கல்லு நொறுங்குற சத்தத்துல தீட்டுறவனுக்கு ஒரு சின்ன போதையும் வெறியும் கிளம்பும். அருவாளத் தீட்டுறதே ஒரு லயம்தான்; அதுஒரு சொகந்தான்.

சட்ட போடாத ஒடம்புல கல்லுமாதிரி இறுகிக் கெடந்த தோள்சதை ஏறிஏறி எறங்க "சரைங்சரைங்" ங்கிற சத்தத்துல பேயத்தேவர் அருவாத் தீட்டிக்கி ட்டிருந்தப்பா விருதாப்பயக ரெண்டுபேரு அவரக் கண்டும் காணாமக் கடந்து போனாங்க.

"ஏலே! வெவசாயம் பண்றவந்தானடா வெட்ட ருவா தீட்டணும்?"

"வாஸ்தவமான பேச்சு..."

"பேயத்தேவனும் தீட்றான்...!"

"ஏன் பேயத்தேவன் வெட்டருவா தீட்டப் படாதா?"

"வெட்டருவா தீட்றத விட்டுப்புட்டு, கத்திகித்தி தீட்டிப் பழகுனான்னா கல்யாணத்துக்குப் பெறகு கஞ்சி ஊத்தும் இல்லையா"

சரக்கென்று நின்றது வெட்டரிவாள் தீட்டும் சத்தம். தீட்டிய வெட்டரிவாளைப் பெருவிரலால் பதம்பார்க்க, அது அவர் விரலைப் பதம்பார்க்க, ரத்தம் ஒழுகி நனைந்த அரிவாளோடு பேயத் தேவர் எந்திருச்சு நிக்குமுன்ன முட்டுச்சந்து வழி தவ்வி ஓடிப்போனாங்க ரெண்டுபேரும். ஊரே பொறணி பேசுது. வாய்பேசாத ஊமைகளும் கூட சாட பேசுதுக.அப்பன் மட்டும் பேயத்தேவன ஒரு வார்த்தை கேக்கல.ஆனால் எப்பவேண்ணாலும் ஒல கொதிக்கப்போகுது ஒலமூடி விழுகப் போகு துங்கற மாதிரிஒரு சூடு அவங்களுக்குள்ள இருந்து கிட்டே இருந்துச்சு. ஒருநாள் சோளத்தட்ட கொண் டாந்து படப்பு அடஞ்சாக அப்பனும் மகனும். படப்புப்போடுறதுல பெரியதேவர அந்த ஊர்ல யாரும் அடிச்சுக்கிற முடியாது.

மலப்பாம்பு வால் மாதிரி பெரிய கையி பெரிய தேவருக்கு. அந்தக் கையக்கொண்டு பதினோரு பாக நீளத்துக்கு மூணு பாக அகலத்துக்கு மொழம் போடுவாரு மொதல்ல. ஒரு அடி உயரமுள்ள காட் டுக் கல்லையோ கரணைக்கல்லையோ நாலு அடிக்கு ஒரு கல்லா நடுவாரு. சமயத்துல ஞாபகம் வந்தா அந்தக் கல்லுகளத் தொட்டும் கும்பிட்டுக்குவாரு. கல்லுவச்சு சோளப்படப்ப பூமிக்கு மேல தூக் குறதே கரையான் புடிக்காம இருக்கத்தான்.

(வளரும்)



# மக்கள் எழுச்சி போராட்டத்தால் அரபு நாடுகளில் கடும் பதற்றம்

## லிபியாவில் இராணுவத் தாக்குதலில் 84 பேர் பலி

(டுபாய்)



**லிபியா, பக்ரைன், ஜோர்தான் உள்ளிட்ட நாடுகளில் ஜனநாயக ஆட்சி முறை கோரி மக்கள் போராட்டம் நடத்துவதால் அரபு நாடுகளில் கடும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. லிபியாவில் இராணுவம் தாக்கியதில் 84 பேர் பலியாகியுள்ளனர்.**

துனிசியா, எகிப்து ஆகிய நாடுகளில் நீண்ட காலமாக நடந்து வந்த ஜனாதிபதி ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். இதனால், அந்த இரண்டு நாடுகளிலும் ஜனாதிபதிகள் பதவி விலகி ஜனநாயக ஆட்சிக்கு வழி விட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில், மற்ற அரபு நாடுகளிலும் இந்தக் கிளர்ச்சி பரவியுள்ளது.

கால்பந்து வீரருமான அல்-சாதி களம் இறங்கியுள்ளார்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. போராட்டம் பரவாமல் தடுப்பதற்காக நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி முதல் இணையத்தள சேவை முற்றிலுமாக முடக்கப்பட்டது. தலைநகரில் போராட்டம்

தைக்கு வர ஷியா பிரிவு எம்.பிக்கள் மறுத்து விட்டனர். வீதிகளில் இராணுவத்தை குவித்து வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை என தெரிவித் துள்ளனர். இதனால் பக்ரைனில் போராட்டம் தொடர்கிறது.

ஷியா முஸ்லிம்கள் அதிகமாக உள்ள தலைநகர் பனாமாவில் போராட்டம் தீவிரமாகியுள்ளது. சன்னி பிரிவை சேர்ந்த மன்னர் ஹமாத்தை பதவி விலகச் செய்வதில் உறுதியாக இருக்கின்றனர்.

*ஜோர்தான்*

யாக தாக்கியது. இதனால் ஏராளமானோர் காயமடைந்தனர். ஏற்கனவே ஜோர்தான் மந்திரி சபையை மன்னர் அப்துல்லா கலைத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏமன் நாட்டிலும் மக்கள் புரட்சி வெடித்துள்ளது. தலைநகர் சனாவில் நேற்று முன்தினம் நடந்த பேரணி மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதில் ஒருவர் பலியானார். 5 பேர் காயமடைந்தனர். துறைமுக



அல்ஜீரியா, பக்ரைன்,லிபியா, ஜோர்தான்,ஏமன் ஆகிய நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். குறிப்பாக ,லிபியாவில் மிகத் தீவிரமாக போராட்டம் நடைபெறுகிறது. அங்கு ஜனாதிபதியாக இருக்கும் முவம்மர் கடாபி கடந்த 42 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறார்.

*இணைத்தள சேவை முடக்கம்*

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தீவிரமாகி உள்ள போராட்டம் மேற்கு பகுதிகளிலும் பரவியுள்ளது. லிபிய தலைநகர் திரிபொலியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏராளமான மக்கள் வீதிகளில் இறங்கி போராடினார்கள். ஆனால் போராட்டத்தை அடக்க இராணுவத்தை கடாபி ஏவி விட்டுள்ளார் . மேலும் பல்வேறு இடங்களில் அரசு ஆதரவு போராட்டத்தையும் ஊக்குவித்து வருகிறார். கடாபிக்கு உதவியாக அவருடைய மகனும்

நடத்திய சட்டத்தரணிகள், நீதிபதிகள் ஆகியோர் தாக்கப்பட்டனர். கடந்த மூன்று நாட்களில் நடந்த போராட்டத்தில் இதுவரை 84 பேர் வரை பலியாகி இருப்பதாக அமெரிக்க மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

*பக்ரைன்*

இதுபோல பக்ரைன் நாட்டில் மன்னர் ஹமாத்துக்கு எதிராக போராட்டம் வெடித்துள்ளது. வீதிகளில் இராணுவமும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். இதற் கிடையே மன்னார் ஹமாத்திடம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் பேசினார். அப்போது அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துமாறு மன்னரை ஒபாமா கேட்டுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த ஹமாத் முன்வந்தார். அதற்காக தனது மகனும் இராணுவ துணை தலைமை தளபதியுமான சல்மான் ஹமாத்தை அனுப்பினார். ஆனால் பேச்சுவார்த்




இதுபோல மற்றொரு அரபு நாடான ஜோர்தானிலும் போராட்டம் நடைபெறுகிறது. ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி தலைநகர் அம்மானில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற அமைதிப்பேரணி நடந்தது. அப்போது அரசு ஆதரவாளர் கும்பல் ஆயுதங்களுடன் வந்து பேரணியில் சென்றவர்களை சரமாரி

நகரான ஏடன் நகரில் இரண்டு அரசு கட்டடங்கள், ஒரு பொலிஸ் நிலையம் ஆகியவற்றை 7 ஆயிரம் போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டு தீ வைத்தனர். அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகளில் ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி மக்கள் போராடுவதால் அரபு நாடுகளில் கடும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## இஸ்ரேலுக்கு எதிராக தீர்மானம்

## வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்தது அமெரிக்கா

பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய நாட்டவரின் சட்ட விரோதக் குடியேற்றத்தைக் கண்டிக்கும் வகையில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நேற்று முன்தினம் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் இதற்கு ஆதரவாக வாக்களித்தன. ஆனால் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை நிராகரித்தது.

கடந்த 1967இல் இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கிடையில் நடந்த போரில் பாலஸ்தீனத்தின் பல பகுதிகளில் இஸ்ரேலியர்கள் குடியேறினர். காலப்போக்கில் அவர்கள் வெளியேற்றப்பட்டாலும் மேற்குக் கரையின் ஜெருச லேம் நகரின் கிழக்குப் பகுதி மற்றும் கோலன் பீடபூமிப் பகுதிக் குடியேற்றங்களை இஸ்ரேல் ஆதரித்து வருவதோடு அங்கு குடியேறும்படி இஸ்ரேலியர்களை ஊக்கப்படுத்துகிறது. சர்வதேசச் சட்டப்படி இந்த குடியேற்றத்தை இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் சட்ட விரோதம் என்று ஒப்புக்கொண்டன. அதேநேரத்தில் இஸ்ரேல் , பாலஸ்தீனப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் பாலஸ்தீன எல்லையில் உள்ள இஸ்ரேலிய சட்ட விரோதக் குடியேற்றத்தை கண்டிக்கும் வகையில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நேற்று முன்தினம் ஒரு தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

தீர்மானத்தை நிறைவேற்ற ஆதரவாக இந்தியா உள்ளிட்ட நாடுகள் வாக்களித்தன. ஆனால் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை நிராகரித்தது. இது குறித்து ஐ.நா. வுக்கான இந்தியத் துணைத்தூதர் மஞ்சீவ சிங்புரி கூறுகையில்,

பாலஸ்தீன எல்லையில் உள்ள இஸ்ரேலியக் குடியேற்றம் சர்வதேச சட்டப்படி சட்ட விரோதம் என்ற தீர்மானத்தைக் கொண்டு வர இந்தியா ஆதரவு தெரிவித்ததோடு அதற்கு ஆதரவாகவும் வாக்களித்தது என்றார்.

வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை நிராகரித்ததன் மூலம் இஸ்ரேலியக் குடியேற்றம் சரியே என அமெரிக்கா ஆதரவளித்ததாக கருத வேண்டாம். அமெரிக்கா மற்றும் உலக நாடுகளின் ஆதரவுடனான இரு தரப்புபேச்சுவார்த்தை மட்டுமே இஸ்ரேல், பாலஸ்தீன பிரச்சினை தீர ஒரேவழி. இதுபோன்ற தீர்மானங்கள் பிரச்சினையைத் தீர்க்காது என்று ஐ.நா.வுக்கான அமெரிக்கதூதர் சூசன் ரைஸ் தெரிவித்தார். (ஸ்ரீ)

## நெதர்லாந்து நாட்டில் மிகப்பெரிய இந்துக்கோயில்

(புருஸ்செல்ஸ்)

ஐரோப்பா கண்டத்தை சேர்ந்த நெதர்லாந்து நாட்டில் மிகப்பெரிய மூன்று இந்து கோயில்கள் அமையவுள்ளன. இந்த கோயில்களை அந்நாட்டின் ஹாக்கே நகரைசேர்ந்த ராஜேஸ் ராம்னேவாஸ் வடிவமைத்துள்ளார்.

நெதர்லாந்து நாட்டில் இந்து மதத்தினர் குறிப்பிட்ட சதவீத அளவில் வசித்து வருகின்றனர். அந்நாட்டின் டிராவோ மற்றும் ஹாக்கே நகரங்களில் குறிப்பிட்ட அளவில் இந்துக்கள் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கோயில் 45 அறைகளுடன் கூடியதாக ஒரே வளாகத்தில் கட்டப்படவுள்ளது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு முதல் மக்களின் பயன்பாட்டிற்கு வரும் இந்த கட்டடங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஒதுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# சிரிப்புக்காக ஒரு பல்கலைக்கழகம்

மக்களுக்கு சிரிப்புப் பயிற்சி அளிப்பதற்காக பெங்களூரில் டாக்டர் மதன் கட்டாரியா என்பவர் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கி வருகிறார்.

உயிரினங்களில் சிரிக்கத் தெரிந்த ஒரே உயிரினம் மனிதன் மட்டுமே. இயந்திரத்தனமாகி விட்ட பரபரப்பான நகரத்து வாழ்க்கையில் மனிதன் சிரிப்பைத் தொலைத்து விட்டு காலில் இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்து கொண்டிருக்கிறான். இதன் விளைவாக் காசுகொடுத்து சிரிப்பதற்கென்றே நகர்ப்புறங்களில் லாப்டர் கிளப்புகள் ஏராளமாக உருவாகத் தொடங்கியுள்ளன.

காலை, மாலை நேரங்களில் நடைப் பயிற்சி செய்வது போல இந்த கிளப் உறுப்பினர்கள் பூங்காக்களிலோ, கடற்கரையிலோ கூடி, செயற்கையான முறையில் கோரசாகச் சிரித்துக் கொண்டிருப்பார்கள்.

பெங்களூரைச் சேர்ந்த மதன் கட்டாரியா என்ற சிரிப்பு யோகா நிபுணரும் சிரிப்பு கிளப் ஒன்றை நடத்தி வருகிறார். அவர் சற்று வித்தியாசமாக யோசித்து, தற்போது சிரிப்புக்காக ஒரு பல்கலைக்கழகத்தைக் கட்டி வருகிறார்.

பெங்களூரின் புறநகர்ப் பகுதியில், இந்த பல்கலைக்ககழகத்திற்காக கட்டுமானப் பணிகள் தொடங்கி நடந்து வருகின்றன. இதற்குக் ஹாஹா பல்கலைக்கழகம் என்று பெயரிட்டுள்ளார்.

இது குறித்து மதன் கட்டாரியா கூறியதாவது, மனிதன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு சிரிப்பு முக்கியமான ஒன்று. உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய தன்மை சிரிப்புக்கு உண்டு. பெங்களூரில் நான் நடத்தி வரும் சிரிப்பு கிளப்பில் என்னிடம் ஏராளமானோர் சிரிப்பு யோகா பயின்று வருகின்றனர்.

பெங்களூரில் மட்டும் 250க்கும் மேற்பட்ட சிரிப்புக் கிளப்புக்கள் உள்ளன. இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. எனவே, இதையே பெரிய அளவில், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் செய்தால் என்ன என்று தோன்றியது. எனவே, இப்போது சிரிப்புப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி வருகிறேன்.

பெங்களூர் புறநகர்ப் பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் பல்கலைக்கழகத்தைக் கட்டி வருகிறேன். வகுப்பறைகள், கலையரங்கம், கான் பரன்ஸ்ஹோல், பயிற்சி அறைகள், விடுதி வசதி உள்ளிட்ட அனைத்தும் இதில் உண்டு.

தற்போது 200 பேர் தங்கி பயிற்சி பெறும் வகை யில் உருவாக்கி வருகிறேன். வரும் ஏப்ரல் மாத இறுதியில் வகுப்புக்கள் தொடங்க உள் ளன. (ஸ்ரீ)

# தனித் தெலுங்கானா கோரி ஐதராபாத்தில் வன்முறை

(ஐதராபாத்)

ஐதராபாத்தில் தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கக்கோரி போராட்டம் நடத்திவரும் உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் திடீரென்று வன்முறையில் ஈடுபட்டனர். அப்போது 5 பஸ்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. பொலிஸாரின் கூடாரங்களும் தீ வைக்கப்பட்டன.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்று கோரி தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியினரும் தெலுங்கானா பகுதியில் உள்ள பிற கட்சியினரும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஐதராபாத்திலுள்ள உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸார் தங்குவதற்காக கூடாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு மாதமாக ஐதராபாத்திலும் பிற பகுதிகளிலும் தெலுங்கானா போராட்டம் ஓய்ந்து இருந்தது. இந்த நிலையில் உஸ்மானியா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் திடீரென்று வன்முறை வெடித்தது.

மாணவர்கள் உள்ளிட்ட தெலுங்கானா ஆதரவாளர்கள் 200 பேர் திரண்டு வாகனங்கள் மீது சரமாரியாக கல்வீசி தாக்கினார். இரண்டு போக்குவரத்து கழக பஸ்களையும் மூன்று தனியார் பஸ்களையும் தீ வைத்து கொளுத்தினார்கள். (ஸ்ரீ)

# உலகப் பொருளாதார சமச்சீரற்ற நிலைக்கு இந்தியா காரணமல்ல

## இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு



உலக பொருளாதார சமச்சீரற்ற நிலைக்கும் சர்வதேச சந்தையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் இந்தியா பொறுப்பேற்க முடியாது என இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் தலைநகர் பாரிசில் ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாடு இரண்டு நாட்களாக நடந்த்து. இதில் அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசியதாவது, உலகப் பொருளாதார சமச்சீரற்ற நிலைக்கும் சர்வதேச சந்தையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் இந்தியா காரணம் இல்லை. சர்வதேச சந்தையில் உற்பத்திப் பொருட்களின் விலை அபரிமிதமாக கூடுவதற்கும் இந்தியா பொறுப்பாக முடியாது. பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றப் பாதையில் உள்ள இந்தியா பருவகால காரணிகளால் எளிதில் பாதிக்கப்படுகிறது. அதனால் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. பருவநிலை மாற்றம் காரணமாக இந்தியாவில் உணவுப் பணவீக்கமும் அதிகரித்துள்ளது. உணவுப் பணவீக்க அதிகரிப்பு மக்களின் நுகர்வு முறையிலும் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.

உணவுப் பணவீக்கம் அதிகரிப்பதால் பொதுவான பணவீக்கமும் அதிகரித்து பரந்த அளவிலான பொருளாதார மேலாண்மைக்கு சவால் விடுவதாக அமைகிறது. சர்வதேச அளவில் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே இருப்பதால் இந்தியாவில் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது பெரும் சிரமமாகவுள்ளது. உலக பொருளாதாரம் மந்த நிலையில் இருந்து மீண்டும் வந்தாலும் அது எளிதில் உடையக் கூடிய வகையிலேயேயுள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளால் மீண்டும் பாதிக்கப்படக் கூடிய நிலையிலேயே உள்ளது. உற்பத்தி மற்றும் உணவுப் பொருள் விலையேற்றம், அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், சில நாடுகளில் நிலவும் உயரிய பணவீக்கம் போன்றவையே இதற்குக் காரணம். ஐரோப்பாவில் குறிப்பாக அயர்லாந்து மற்றும் கிரீஸ் நாடுகள் சமீபத்தில் சந்தித்த கடன் பிரச்சினைகளால் உலக பொருளாதார மீட்பானது மீண்டும் சீர்குலையும் நிலைக்கு தள்ளப்பட்டது. இவ்வாறு பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். (ஸ்ரீ)

## பாரதச் செய்திகள்

# தூத்துக்குடி-கொழும்பு பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாத நடுப்பகுதியிலேயே ஆரம்பமாகும்

## இந்திய மத்திய அமைச்சர் வாசன் தெரிவிப்பு



(தூத்துக்குடி)

தூத்துக்குடி- கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவதற்கும் சட்டசபை தேர்தலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பணிகள் முடிந்தவுடன் இப்போக்குவரத்து தொடங்கப்படும் என இந்திய மத்திய கப்பல் துறை அமைச்சர் வாசன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி துறைமுகத்தில் நேற்று முன்தினம் அவர் கூறியதாவது,

தூத்துக்குடி - கொழும்பு இடையே பயணிகள் கப்பலை இயக்க தேவையான பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக தூத்துக்குடியில் சுங்கம் மற்றும் குடியுரிமை அதிகாரிகளை நியமிக்க மத்திய நிதித்துறை அமைச்சகத்தின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. இக்கப்பல் போக்குவரத்து இம்மாத இறுதிக்குள் தொடங்கும் என ஏற்கனவே கூறியிருந்தோம். எஞ்சியுள்ள பணிகள் காரணமாக அது மேலும் 15 நாட்கள் தள்ளிப் போகும் என எதிர்பார்க்கிறோம்.

இப்போக்குவரத்து தொடர்பாக இலங்கை அதிகாரிகள் இங்கு வந்து ஆய்வு செய்தனர். கப்பலை இயக்க கடந்த ஜனவரி வரை மொத்தம் ஏழு நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன.

அவற்றில் முதற்கட்டமாக நான்கு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு இறுதியில் தகுதி அடிப்படையில் பிளமிங்கோ டியூட்டி ப்ரீ ஷொப் மற்றும் டிரேடெக்ஸ் ஷிப்பிங் கோர்ப்பரேஷன் ஆகிய இரு நிறுவனங்கள் கூட்டாக இணைந்து கப்பலை இயக்க தெரிவு செய்யப்பட்டன. அவர்கள் ஆண்டிற்கு இத்துறைமுகத்திற்கு 7.2 கோடி ரூபாய் செலுத்துவர். அடுத்த பத்து ஆண்டு வரை இக்கட்டணம் அவர்களுக்கு பொருந்தும். அந்நிறுவனத்திற்கு கப்பலை இயக்க உத்தரவு வழங்கப்பட்டு விட்டது.

இம்மாத இறுதிக்குள் அவர்கள் கப்பலை தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கொண்டு வந்து நிறுத்துவர். இதற்கான ரெண்டர் எந்த ஒளிவு மறைவுமின்றி வெளியிடப்பட்டு இந்த கூட்டு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோல இலங்கை தரப்பில் அந்நாட்டு அரசு கப்பல் கழகம் அங்கிருந்து இங்கு பயணிகள் கப்பலை இயக்கவுள்ளது. முதல் மூன்று மாதத்திற்கு வாரத்தில் இரண்டு முறை பயணிகள் கப்பல் இயக்கப்படவுள்ளது. அதன் பின் இருநாட்டு அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழுவைக் கூட்டி கப்பலை தினமும் இயக்குவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

கப்பல்துறை அமைச்சகம் பயணிகளுக்காக கப்பலை இயக்குகிறது. இதில் அமைச்சகம் அரசியலை புகுத்தாது. இப்போக்குவரத்து தொடங்கப்படுவதற்கும் சட்டசபை தேர்தலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டவுடன் இக்கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும். முதற்கட்டமாக ஆண்டிற்கு ஒரு இலட்சத்து 8 ஆயி ரம் பயணிகள் இக்கப்பலில் செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா வளர்ச்சி காரணமாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டிற்கு 2 இலட்சத்து 50 பேர் பயணிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு வாசன் கூறினார். (ஸ்ரீ)



அசாமிலுள்ள ஹலிகவோன் கிராமத்திற்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அப்பகுதி மக்களுடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# கடமைக்கு விடை கொடுங்கள்!

சின்ன வயதிலிருந்தே, உங்களுக்குள் ஒரு கடமை உணர்வை வளர்த்திருப்பார்கள். மகனைப் படிக்கவைப்பது தந்தையின் கடமை, வயதான தந்தையைக் கவனித்துக் கொள்வது மகனின் கடமை, மாணவனைத் தயார் செய்வது ஆசிரியரின் கடமை, சட்டத்தை மதித்துநடப்பது குடிமகனின் கடமை, எல்லையில் நாட்டைக் காப்பது ராணுவத்தின் கடமை என்றெல்லாம் சொல்லிச் சொல்லி, 'கடமை' என்ற வார்த்தையை உங்களுக்குள் ஆழமாக



விதைத்திருப்பார்கள்.

கடமையைச் செய்வதாக நினைத்து எதைச்செய்தாலும் உங்களுக்குக் களைப்புத்தான் மிச்சமாகும். ரத்த அழுத்தம் ஏறும். தன்னுடைய செருப்புத் தொழிற்சாலைக்கு அந்த முதலாளி வந்திருந்தார். அங்கே, ஒருபகுதியில் வேலை மும்முரமாக நடந்துகொண்டு இருந்தது.

"ஐயா, அடுத்தவர் என்ன செய்கிறார் என்று கவலைப்படாமல், தங்கள் கடமையை ஆற்றும்படி இங்கே ஒவ்வொரு தொழிலாளருக்கும் கச்சிதமாகச் சொல்லித்தரப் பட்டிருக்கிறது" என்றார் மேலாளர், பெருமையாக.

ஒருதொழிலாளி அட்டைப் பெட்டியை எடுத்து அதன் மீது லேபிள் ஒட்டி, அடுத்தவரிடம் தள்ளினார். அவர் அந்தப் பெட்டியில் ஒற்றைச் செருப்பைப் போட்டார். அவரை அடுத்திருந்தவர் அந்தப் பெட்டியை மூடி ஒட்டினார். அந்தப் பெட்டி விற்பனை செக்ஷனுக்கு செல்லும் வண்டியில் ஏற்றப்பட்டது.

"என்ன நடக்கிறது இங்கே? செருப்புக்களை ஜோடியாகத்தானே தயாரிக்கின்றோம்? ஏன் ஒற்றைச் செருப்புக்களாக பேக் செய்கிறீர்கள்?" என்று முதலாளி பதறினார். "இடது கால் செருப்பை எடுத்துப் பெட்டியில் போடவேண்டியவர் இன்றைக்கு லீவு சார்! ஆனாலும் வந்திருப்பவர்கள் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்கிறார்கள்!" என்று மேலாளரிடமிருந்து பதில் வந்தது.

எந்த ஒரு வேலையையும் ரசித்து, அனுபவித்துச் செய்யாமல், கடமைக்குச் செயற்பட்டால், இப்படித்தான் ஆகும்! விரைவிலேயே சலிப்பும் வெறுப்பும் விரக்தியும் கொண்ட இயந்திரமாக மாறிப் போவீர்கள். யார் சொல்லியோ செய்யாமல், அதை நீங்களாகப் பொறுப்புடன் உணர்ந்து விரும்பிச் செய்தால் மட்டுமே இந்த வேதனை இருக்காது. உயர்வும் உங்களைத் தேடி வரும். பெரும்பாலானவர்கள் வெற்றி பெறும்போது அவர்களுடைய சாதனையாகவும், தோல்வியுறும்போது அதை விதியின் விளையாட்டாகவும் கருதுகிறார்கள்.

நீங்கள் தேர்வு எழுதினீர்கள். மிக நன்றாக எழுதியிருந்தீர்களென்றால், 'பிரமாதமாக எழுதினேன்' என்பீர்கள். சரியாக எழுதவில்லையென்றால்...? 'நேரமே போதவில்லை' என்பீர்கள். 'பாடத்தில் இல்லாத கேள்விகள் வந்துவிட்டன' என்பீர்கள். அல்லது, வேறு காரணம் தேடுவீர்கள்.

வெற்றிக்கு உடனடியாக உரிமை கொண்டாடி பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராகும் நம் மனம், தவறு நடந்துவிட்டால் மட்டும் அதற்கு வேறு எதைப் பொறுப்பாக்கலாம், யார் மீது பழி போடலாம் என்று அலை பாய்கிறது.

பொதுவாகவே பொறுப்பை ஏற்பது என்றால், சுமைகளைச் சுமப்பது என்றுஅர்த்தப்படுத்திக் கொள்பவர்கள் தான் நம்மில் அதிகம்.

விளக்கை யார் ஏற்றுவது, தட்டை யார் கழுவுவது, தண்ணீர் பிடித்து வைப்பது யார் போன்ற சின்னச் சின்ன விடயங்களில் கூட பொறுப்பேற்பது பற்றிய சர்ச்சைகள் நம்பமுடியாத அளவிற்கு நீண்டுகொண்டு போகின்றன.

இப்படித்தான் சங்கரன்பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் வாசல் கதவை யார் பூட்டுவது என்பதில் தகராறு வந்துவிட்டது. அவர்கள் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். 'யார் வாய் திறந்து முதல் வார்த்தை பேசுகிறோமோ, அவர்தான் எழுந்து போய்க் கதவைப் பூட்ட வேண்டும்!'

அவ்வளவுதான்! அதன்பின் அவர்களுக்குள் பேச்சுவார்த்தை நின்றது. 'சாப்பாடு போடு' என்று சங்கரன் பிள்ளையோ, 'சாப்பிடவரலாம்' என்று அவர் மனைவியோ வாய் திறந்தால்கூட கதவைப் பூட்டவேண்டிய பொறுப்பு வந்துவிடுமே என்று, பிடிவாதமாகப் பட்டினியாகவே கிடந்து, மௌனம் சாதித்தார்கள்.

நள்ளிரவில் சில ரௌடிகள் வீட்டினுள் நுழைந்தார்கள். ஹாலில் உட்கார்ந்து இருந்த தம்பதி, தாங்கள் நுழைந்ததைக் கண்டும் கூச்சல் போடாமல் மௌனமாக 'வேடிக்கை பார்ப்பதைக் கண்டு, ரௌடிகளுக்கு ஆச்சரியம்.

கைக்குக் கிடைத்த பொருட்களையெல்லாம் அள்ளிக் கொண்டார்கள். அப்போதும் தம்பதியர் பேசாமல் இருக்கவே, ஒருவன் தைரியமாகி சங்கரன் பிள்ளையின் மனைவியின் காதிலிருந்து வைரத்தோட்டைக் களற்றினான். அதற்குக் கூட அவள் குரல் கொடுக்கவில்லை. அடுத்தவன் ஆச்சரியமாகி, அங்கிருந்த கத்தியை எடுத்து சங்கரன் பிள்ளையின் மீசையை மழிக்கப் பார்த்தான். அதுவரை கல்லுளிமங்கனாக அமர்ந்திருந்த சங்கரன் பிள்ளை வேறுவழியின்றிக் குரல் கொடுத்தார்...

"சரிசரி, நானே எழுந்துபோய்க் கதவைப் பூட்டிக் கொள்கிறேன்!"

இதுவா பொறுப்பு?

உங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலையை உங்களுக்கு விருப்பமானதாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்றால், அதற்கான பொறுப்பை நீங்கள் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான், தோல்விகள் ஏற்பட்டாலும், அந்த வேதனை உங்களைப் பாதிக்காது. அந்தத் தோல்விகளையே எப்படிவெற்றிக்கான பாடங்களாக மாற்றிக் கொள்ள முடியும் என்பதையும் நீங்கள் கற்க முடியும்.



## ஆன்மீகம் 23

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# தமிழ் மொழி வளர்ச்சியில் டாக்டர். கால்டுவெல்

02

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய சேர்.டேனியல் சேண்ட்போர்டின் என்ற மொழியியல் அறிஞரால் தூண்டப் பெற்று ஒப்பியல் மொழி நூலைக் கற்றுத் தேர்ந்தார். அவர் முதன் முதலில் இந்தியாவை நோக்கிக் கப்பலில் பயணித்த போது சி.பி.ப்ரௌன் என்ற சென்னை அரச அலுவலரிடம் தெலுங்கையும் சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்ந்தார். அதன்பின் சென்னை வந்தவுடன் அங்குள்ள தமிழில் புலமை பெற்ற ட்ரு என்ற சமயத் தொண்டர் வீட்டில் தங்கியிருந்த போது தமிழை நன்கு கற்றுத் தமிழின் உயர்நடை இலக்கிய மொழிக்கும் பேச்சு மொழிக்கும் தொடர்பில்லாமையைக் கண்டு வியந்து இது இந்திய மொழிகளிடம் காணப்படும் புதுமை என்று அறிந்தார். தமிழ் இலக்கியங்களை மாசறக் கற்ற அவர் சென்னையிலிருந்து இடையன்குடிக்கு நடந்தே சென்றார். செல்லும் வழியில் தஞ்சையில் வேதநாயகம் சாஸ்திரியாரை நேரில் சந்தித்து அவரது தமிழ்ப்பாடல் திறனைப் பாராட்டினார். வழியெங்கிலும் தமிழ் மக்களின் கலாசாரக் கூறுகளைக் கூர்ந்து கவனித்தார்.

அவருடைய இந்தக் கால்நடைப் பயண அனுபவம் அவருடைய ஆய்வு நூல்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அவரது இத்தகைய ஆய்வு மனப்பான்மை எப்பொழுதும் அவரது சமயப் பணிக்கு இடையூறாக இருக்க அவர் அனுமதித்ததில்லை.

கால்டுவெல் தமிழ்மொழியின்பால் கொண்ட ஈடுபாடு அவர்தம் இறைபணிக்கும் உதவியது. 1842ஆம் ஆண்டு ஜெப புத்தகத்தைப் புதுப்பித்து திருத்திய பதிப்பாக வெளியிட ஏற்படுத்தப்பட்ட மொழி சீர்திருத்தும் பணிக்குழுவுடன் இணைந்து செயற்பட்டார். இக்குழுவில் யாழ்ப்பாணத்திலிருந்து ஜே.கில்னர் மற்றும் எல்.ஸ்பால்டிங் என்ற இறைப் பணியாளர்கள் கலந்துகொண்டனர். இப்பணி 1872ஆம் ஆண்டும் தொடர்ந்தது.

1849இல் அவர் தன்னைச் சுற்றி வாழ்ந்த சாணார் என்ற சமூகத்தினரைப் பற்றி எழுதிய "திருநெல்வேலி சாணார்" என்ற நூல் ஒரு தமிழ் இன வரலாற்று நூலாகும். சாணார் சமயம் மற்றும் வழிபாடு குறித்துச் சர்ச்சை எழுந்தாலும் அந்நூல் அவரின் தமிழ்ச் சமூக அக்கறையின் வெளிப்பாடு என்பதை மறுக்க முடியாது. அத்துடன் இச்சாணார் சமூகத்தின் தோற்றம், சமய நம்பிக்கை, வழிபாடு போன்றவை எவ்விதத்திலும் பிராமணர்களுடன் தொடர்புடையதல்ல என்பதிலிருந்து திராவிடப் பண்பாடு எவ்வாறு ஆரியப் பண்பாட்டிலிருந்து வேறுபட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

பன்மொழிப் புலவர் கால்டுவெல்லின் மொழியாக்கத் திறன் தமிழ் அறிஞர்களுக்கு இன்றும் ஒரு சவாலாக அமைந்துள்ளது. மொழியறிஞர் கால்டுவெல்லுக்கு மங்காப் புகழைப் பெற்றுத் தந்தது, அவர் எழுதிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலாகும்.

1856ஆம் ஆண்டு இந்நூலைப் பாராட்டி அவர் கல்வி கற்ற ஸ்கொட்லாந்து கிளாஸ்கோ பல்கலைக்கழகம் அவருக்கு 'இலக்கிய பண்டிதர்' (LL.D) என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது. இந்நூலில் 'தமிழர்' என்ற பதத்திற்குப் பதிலாக 'திராவிடர்' என்ற சொல்லை அறிமுகப்படுத்தியது இவரே. இச்சொல்லை இனங்களின் அடிப்படையில் அல்லாமல் மொழிகளின் அடிப்படையில் பயன்படுத்துகின்றார். மொழிகளில் காணக் கிடைக்கும் வேர்ச் சொற்கள் மற்றும் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு திராவிட மொழிகள் பன்னிரெண்டு என்றும் அதில் பண்பட்ட மொழிகள் தமிழ் மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு அல்லது கூர்க்கு என்று ஆறாகவும் நுதம், கோதம், கோண்டு, கந்தம் அல்லது கு, ஒராவோன், இராஜ்மகால் என்று பண்படாத மொழிகள் ஆறாகவும் வகுத்துக் கூறியுள்ளார். இவைகள் அனைத்திலும் திருத்தமுற்ற மொழி தமிழே என்கிறார். இத்திராவிட மொழிக் குடும்பத்தில் தொன்மையான மொழி தமிழ்மொழியே என்று நிரூபிக்கிறார்.

திராவிட மொழிகள் வடமொழியிலிருந்து வேறானவை என்றும் இதனைஇம்மொழிகளில் காணப்படும் வடமொழிக் கலப்பில்லாத மரபுச் சொற்களை வைத்து அறியலாம் என்று கூறுகிறார். தமிழில் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கின் அது தனித்து இயங்கும் ஆற்றல் வாய்ந்தது என்கிறார். செம்மொழியான தமிழ்மொழியின் பண்டைய இலக்கியங்களில் வடசொற்கள் அருகிக் காணப்படுகின்றன. அக்காலச் செய்யுள்கள் மற்றும் பிராமணர் கலப்பு இல்லாத தாழ்ந்த குடிமக்களின் பேச்சில் வட சொற்கள் மிக மிகக்குறைவு, தமிழ் நாட்டில் பழங்கல்வெட்டுக்கள் வடமொழிக் கலப்பற்றுக் காணப்படுகின்றன என்ற ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி தமிழை வடமொழியிலிருந்து வேறுபடுத்துகிறார்.

முனைவர், மு.சு.தாங்கம் M.A.(His), M.Phil., M.A.(J.M.C), M.Ed., Ph.D
உதவிப்பேராசிரியர் (s.g), சாராள் தக்கர் கல்லூரி
திருநெல்வேலி, தமிழ்நாடு.

இலங்கைக்கு எதிராக

# ஐ.நா. மனித உரிமை பேரவையில் முறையிட புலம்பெயர் தமிழர்கள் முயற்சி

## புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் முயற்சித்து வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்த முயற்சிக்கு சில ஐரோப்பிய நாடுகளின் அமைச்சர்களும் ஆதரவளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் வாழும் ஒரு தொகுதி புலம்பெயர் தமிழ் மக்களே இந்த திட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் இதற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் ஐரோப்பாவின் சில அமைச்சர்களுடன் புலம்பெயர் தமிழர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை பேரவை அமர்வுகளுக்கு முன்னர் வெளியிடச் செய்ய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் முனைப்பு காட்டி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்தத் திட்டங்களை அரசாங்கம் அறிந்து கொண்டுள்ளதாகவும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ)

# ஜே.வி.பி. வேட்பாளர்கள் மீது கண்டியில் தாக்குதல்

எம்பிலிப்பிட்டிய மற்றும் கண்டியைச் சேர்ந்த ஜே.பி.பி வேட்பாளர்கள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு எம்பிலிப்பிட்டிய நகர சபைக்கான தேர்தல் குழுத் தலைவரும் முன்னாள் நகரசபை உறுப்பினருமான ஜீ.எஸ்.கே. வெதகொட மீது இனந் தெரியாதோர் கடும் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக எம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கண்டி மாவட்டத்தின் கோரளே பிரதேச சபைக்கு போட்டியிடும். ஜே.வி.பி.யின் இரு வேட்பாளர்களான கபில அபேரத்ன மீதும் சுனில் பண்டார என்பவர் மீதும் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

இவர்களைப் பின்தொடர்ந்து வந்த மற்றுமொரு அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள் இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன் இவர்களிடம் இருந்த 7 ஆயிரத்து 500 ரூபாவினையும் பறித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த வேட்பாளரான கபில அபேரத்ன தற்போது நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் இது தொடர்பாக 119 க்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி.யின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

# கட்டார் நாட்டு அரசர் இலங்கைக்கு விஜயம்



கட்டார் நாட்டு அரசர் ஷேய்க் ஹமாத் பின் கலிபா அல் தானி எதிர்வரும் மேமாதம் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று இவர் வருகை தரவுள்ளார்.

இவர் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகள் பற்றி இங்கு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் எனத் தெரிகிறது.

கட்டாருக்கான இலங்கையின் பதில் தூதுவர் ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ஸ்ரீ)

# வெடிபொருட்களுடன் சந்தேக நபர் கைது

(கொழும்பு)

கொழும்பு நோக்கி வாகனம் ஒன்றில் வந்து கொண்டிருந்த நபர் ஒருவர் களுத்துறை மாவட்டத்தில் வைத்து வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரின் உடைமையில் இருந்து சீன நாட்டு தயாரிப்பான கைத்துப்பாக்கி ஒன்று, 09 மில்லி மீற்றர் ரவைகள் ஆகியன சோதனைக் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் திஸ்ஸ மகாராம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

## கனடா அனுப்புவதாக கூறி

# பணமோசடி செய்தவருக்கு உதவிய இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கைது

கனடாவில் தொழில் கல்வி பெற்றுத் தருவதாக தெரிவித்து பணத்தை மோசடி செய்த ஒருவருக்கு உதவிய இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து குறிப்பிட்ட நபர் 300 பேரிடம் சுமார் 3 கோடி ரூபாவை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இம் மோசடி தொடர்பாக சந்தேகிக்கப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை நடத்தி வந்த வர்த்தகர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். எவ்வாறினும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையத்தின் செயலாளராகக் கடமையாற்றிய பெண் கைது செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-9)

# கடற்கொள்ளையரால் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த ஜனவரி 4 ஆம் திகதி தர்ஷண6 என்ற மீன்பிடிக் கப்பலில் மிரிசவில் இருந்து புறப்பட்ட மீனவர்கள் அவர்களது படகுகளுடன் கொள்ளையர்களால் கடந்திச் செல்லப்பட்டனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்களில் இருவர் கடலில் வைத்து கொல்லப்பட்டனர்.

பின்னர் மீன்பிடித்துறை அமைச்சின் நடவடிக்கைகளால் இவர்கள் 16 நாட்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஸ்ரீ)

# காலி, மாத்தறை தமிழ், முஸ்லிம் மக்கள் சாட்சியமளிக்க ஆர்வமில்லை

## நல்லிணக்க ஆணைக்குழு கவலை

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கான விஜயத்தின் போது குறித்த பிரதேசங்களில் வாழும் எந்தவொரு தமிழ் பிரஜையும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் காலி மாவட்டத்திற்கான அமர்வின் போது ஒரு முஸ்லிம் பிரஜை சாட்சியமளித்த துடன் மற்றுமொரு முஸ்லிம் பிரஜை மகஜ ரொன்றை கையளித்தார்.

எனினும் மாத்தறை மாவட்டத்திற்கான விஜயத்தின் போது எந்தவொரு தமிழ் மற்றும் முஸ்லிம் பிரஜையும் சாட்சிமளிக்கவோ மகஜர் கையளிக்கவோ இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

நல்லிக்க ஆணைக்குழு கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாத்தறை மாவட்ட அமர்வை மாத்தறை மாவட்ட செயலகத்திலும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலி மாவட்ட அமர்வை காலி பழைய தேர்தல் செயலகத்திலும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# இலங்கை – பாகிஸ்தான் விமான சேவை ஆரம்பம்

பாகிஸ்தான், கராச்சி மற்றும் இலங்கைக்கிடையில் இடை நிறுத்தி வைக்கப்பட்ட விமான சேவை 60 வருடங்களுக்குப் பின் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதன் நிகழ்வாக 190 பயணிகள் 8 பணியாளர்களைக் கொண்ட எ310 விமானம் பாகிஸ்தான், கராச்சியில் இருந்து இலங்கைக்கு வருகை தந்தது. இவ் விமான சேவை இரு வாரத்துக்கு ஒரு தடவை இடம்பெறும். (ஸ்ரீ)



*அரச கணக்காய்வு திணைக்களத்தின் வடக்கு மாகாண அரச நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்கான உதவிக்கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் அண்மையில் கோப்பாய் வடக்கில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமரவீர மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதி கணக்காய்வாளர் அதிபதி விஜேயசிங்க, உதவி கணக்காய்வாளர் நாயகம் ரி. பாலசுப்பிரமணியம், கணக்காய்வு அத்தியட்சகர் வி. மணிவதனன் உட்பட கணக்காய்வு அதிகாரிகள் நிற்பதைப் படத்தில் காணலாம்.*

## பஞ்சமுக இலட்சார்ச்சனையும் கணபதி ஓமமும்

(யாழ்ப்பாணம்)

மாதகல்- அரசடி அருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பஞ்சமுக இலட்சார்ச்சனை, கணபதி ஓமப் பெருஞ்சாந்தி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 5 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் நடைபெற்று 7 மணிக்கு விசேட பூசைகள், அக்கினிகுண்ட பூசையும் ,கணபதி திரவிய ஓமம் ,இலட்சார்ச்சனை,தாரா ஓமமும், மகா பூர்ணாகுதியும் நடைபெறும்.

தொடர்ந்து அலங்கார தீபாராதனை நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். (ஸ்ரீ)

# வேட்புமனு நிராகரிக்கப்பட்டோர் வேட்பாளர் சார்பாக பிரசாரம் மேற்கொள்ள தடை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் சமர்ப்பித்து நிராகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் போட்டியிடும் வேறு அரசியல் கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் சார்பாகத் தமது பெயர்களைப் பதிலீடு செய்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தமக்கு முறைப்பாடு கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்,

போட்டியிடுகின்ற ஏதேனும் ஒரு அரசியல் கட்சியின் அல்லது ஒரு சுயேட்சைக் குழுவின் வேட்பாளர்கள் சார்பாக உரிய தேர்தல் சின்னம் மற்றும் வேட்பாளர்களின் இலக்கங்களின் கீழ் போட்டியிட வேறெந்தவொரு நபருக்கும் உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்றும் எவரேனும் ஒரு வேட்பாளரின் பெயரைப் பதிலீடு செய்ய முடியாதெனவும் அனைத்து வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலொன்றில் வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் என்பவற்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளுக்கு விகிதாரசாரமாக குறித்த கட்சி அல்லதுகுழு உரித்தாக்கிக் கொண்டுள்ள உறுப்புரிமைகளின் எண்ணிக்கை அதி கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள வேட்பாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும். எவரேனும் ஓர் உறுப்பினரின் மரணம் கேட்டு விலகல் மற்றும் வேறெனுமொரு காரணமொன்றினால் வெற்றிடம் ஏற்படுகின்ற போது அவ்வெற்றிடத்திற்குத் தகுதியான நபரொருவர் அக்கட்சியின் அல்லது அக்குழுவின் கீழ் போட்டியிட்டு கணிசமானளவு விருப்புக்களைப் பெற்றுள்ள வேட்பாளர்கள் உரிய கட்சிச் செயலாளரால் அல்லது சுயேட்சைக் குழுத் தலைவரால் குறிப்பாகப் பெயர் குறிப்பிடப்படுகின்ற வேட்பாளரே தேர்ந்தெடுக்கப்படுவார்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# காணாமல் போனோரை இறந்தவர்களாக பதிவு செய்யும் சட்டம் நிறைவேற்றம்

(கொழும்பு)

காணாமல் போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்யும் 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் மூன்று வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும். இதுவொரு தற்காலிக சட்டமாகும்.

இதன் பிரகாரம் காணாமல் போதல் இடம் பெற்று ஒருவருடத்தின் பின்னரே பதிவை மேற்கொள்ள முடியும். காணாமல் போனவரின் இறப்பைப் பதிவு செய்வதற்காக அவரது நெருங்கிய உறவினர் காணாமல் போதல் இடம்பெற்ற அல்லது இறுதியாக குடியிருந்த பகுதி பிரதேச செயலகமூடாக விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் காணாமல் போன தமது உறவுகள் எங்கோ உயிரோடிருப்பதாகவே பெரும்பாலான குடும்பங்கள் நம்புகின்றன.

அவ்வகையிலேயே அண்மையில் கற்றறிந்த பாடங்கள் ஆணைக்குழுவிற்கு ஐயாயிரத்து ஐந்நூறு முறைப்பாடுகள் கிட்டியிருந்தன. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பெரும்பாலானவை காணாமல் போதல்கள் தொடர்புடையதாகவே இருக்கின்றன.

இந்நிலையில் வன்னி யுத்தத்தின் பின்னர் காணாமல் போனோரது எண்ணிக்கையும் தற்போது சேர்ந்து கொண்டுள்ளது. பெருமளவிலான காணாமல் போனோரது குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் அடைக்கலம் புகுந்து கொண்டுள்ளன. காணாமல் போன தமது உறவுகள் பெரும்பாலும் தடுப்பு முகாமில் உள்ளதாகவே குடும்பங்கள் நம்புகின்றன. (ஸ்ரீ)

# சிறுபான்மை மக்களுக்கான தீர்வுத் திட்டம் அரசிடம் இல்லை

## யோகராஜன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டம் எதுவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிடம் கிடையாது என்று ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட மக்களின் தேவைகளை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பொருட்படுத்தாமல் இளக்காரம் செய்கின்றது. மக்களுக்கு நன்மை கொடுக்கக் கூடிய திட்டங்கள் அரசின் வசம் இல்லை. எனவே தான் அரசை விட்டு விலகினேன்.

எனக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது மிகுதியான நம்பிக்கை உண்டு. நாட்டை அபிவிருத்தி செய்யக் கூடிய ஒரேயொரு தூர நோக்கும் தெளிந்த சிந்தனையும் உடைய தலைவர் ரணில் மாத்திரமே. ஐ.தே.க. தலைவர் பதவியில் ரணில் தொடர வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ யுத்த வெற்றியால்தான் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார். மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

ஆட்சியாளர்களின் தேவைகள் மாத்திரம் நிறைவேற்றப்படுகின்றன. விலைவாசி உயர்வு என்றும் இல்லாதவாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில்தான் அதிகரித்து உள்ளது. மக்கள் வாழ்க்கைச் சுமையால் திண்டாடுகின்றனர்.

இந்த நிலைமை மாற்றி அமைக்க ரணில் தலைமையிலான அரசினாலேயே முடியும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)

# அரசுக்கும் ஹெல உறுமயவுக்கும் இடையில் முரண்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியளான ஜாதிக ஹெல உறுமயவுக்கும் அரசாங்கத்துக்கமிடையிலான மோதல் கடுமையாக வலுத்துவருவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக சிங்கள வார இதழொன்றுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரத்ன தேரர் அளித்துள்ள பேட்டியில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துள்ளார்.

யுத்தத்தை வழிநடத்துவது தவிர அரசாங்கத்துக்கு வேறெந்த விடயத்திலும் தெளிவான கொள்கையோ செயற்திட்டமோ இல்லை என்று அவர் பிரஸ்தாப பேட்டியில் நேரடியாக அரசாங்கத்தை குறை கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கத்தை பாராட்டும் வகையில் கருத்து தெரிவித்து வந்த ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தரே இவ்வாறு விமர்சிப்பதாயின் இரு கட்சிகளுக்குமிடையிலான முரண்பாட்டின் தீவிரத்துக்கு அதனை விட வேறு ஆதாரம் தேவையில்லை.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தர்களே அரசாங்கத்தின் பிரசார நடவடிக்கைளில் முன்னின்றவர்கள். ஆயினும் இம்முறை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் போது அரசாங்கத்துடன் இருந்து கொண்டே விமர்சிக்கின்றார்கள்.

அது மாத்திரமன்றி அண்மையில் கூட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களான அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, டளஸ் அழகப்பெரும, மைத்திரிபால சிறிசேன, சுசில்பிரேமஜயந்த ஆகியோர் முன்னிலையில் இந்த அரசாங்கம் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க மாட்டாது என்ற வகையில் இதே ரத்ன தேரர் விமர்சித்திருந்தமையும் குறிப்பிடத்தக் கது.

(ஸ்ரீ-3)





யா/சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் தா.துஷ்யந்தன் மங்கல விளக்கேற்றுவதனையும் அருகில் அதிபர் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் மாணவர்கள் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

# நல்லிணக்க ஆணைக்குழு முன் காலி மாவட்ட மக்கள் சாட்சியம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்தகால போர் தொடர்பில் ஆராய்ந்து மக்களின் சாட்சியங்களை பதிவு செய்து வரும் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் காலி மாவட்ட மக்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

கடந்த 1970 களின் இறுதியில் இலங்கையில் அக்கால அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார கொள்கையும் விடுதலைப் புலிகள் உருவாக காரணம் என பீ.பி ஹெட்டிகே என்ற ஓய்வுபெற்ற சிங்கள அரச ஊழியர் ஆணைக்குழு முன்னிலையில் சுட்டிக் காட்டினார்

திறந்த பொருளாதாரம் காரணமாக உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்பட்டதும் சந்தை வாய்ப்புக்கள் இல்லாமல் போனமையும் இளைஞர்கள் விரக்தியடைந்து தீவிரவாதத்தின் பாதையில் செல்ல வழிவகுத்தது என அந்த ஓய்வுபெற்ற அரச ஊழியர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெற்கில் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தின் மத்தியில் வாழும் பல தமிழர்களுக்கு தமது பிள்ளைகளுக்கு தமது அடையாளங்களை மறைத்து சிங்களப் பெயர் வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக பத்தேகம பகுதியைச் சேர்ந்த கீர்த்தி ஜயனாத் என்பவர் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் கருத்து தெரிவித்தார்.

காலி கோட்டைப் பகுதியில் பிரஜைகள் குழுவின் தலைவராக உள்ள ரூபன் என்பவர் எதிர்காலத்தில் இவ்வாறான மோசமான யுத்தமும் வன்முறைகளும் ஏற்படாதவாறு அரசாங்கம் சர்வதேச சட்ட நியமங்களை கடைப்பிடிக்க வேண்டும். அரசியல்வாதிகள் இனவாதம் பேசிக் கொண்டு அதிகாரத்துக்கு வராதபடி சட்டங் களை அதிகாரிகள் உருவாக்க வேண்டும் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மற்ற சமூகங்களை மதத்தவர்களையும் மதிக்கும் சகிப்புத்தன்மை மிக்க சமூகமொன்றைக் காட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் பற்றி சந்திரிக்கா பள்ளியகுரு என்ற சட்டத்தரணி தெரிவித்தார்.

**யாழ் நூலக எரிப்பு**

1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது அரசாங்கத்தின் தேர்தல் அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய போது அங்கு யாழ். நூலகத்துக்குத் தீவைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் கண்ட அனுபவங்களை ஆணைக்குழு முன்னிலையில் காலி சமூக அபிவிருத்தி மன்றத்தின் டி.டப்ளிவ் சிறிமான்ன உணர்ச்சிவசப்பட்டு விளக்கினார்.

அன்று விட்ட தவறை இன்றைய ஆட்சியாளர்களும் விடாது நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்வதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியதே இன்றுள்ள முக்கிய கடமை என்றும் அவர் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினார்.

இதேவேளை தமது உறவுகள் யுத்தத்தில் உயிரிழந்த போதிலும் அவர்களுக்கான இழப்பீடுகள் இதுவரை உரியமுறையில் கிடைக்கவில்லையென ஆணைக் குழு முன்னிலையில் தாய்மார் மற்றும் மனைவியர் பலரும் முறையிட்டனர். (ஸ்ரீ)

# இவ்வருடம் அதிகளவில் நேரடி வெளிநாட்டு முதலீடு கிடைக்கும்

## இலங்கை முதலீட்டு சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இவ் வருடம் அதிக அளவில் நேரடி வெளிநாட்டு முதலீடு கிடைக்கும் என இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகள் நேரடியாக எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் ஜயம்பதி பண்தாறநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று வருட காலப்பகுதியில் நான்கு முதல் ஐந்து சதவீதமான நேரடி முதலீட்டு நடவடிக்கைகளை அதிகரிக்க முதலீட்டு சபை விசேட திட்டங்களை அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இந்த ஆண்டில் உல்லாசப் பயணத்திற்கு ஏற்ற சிறந்த இடங்களில் இலங்கையும் ஒன்று என லண்டனில் இருந்து வெளிவரும் இண்டிப் பெண்டன் செய்தித்தாள் கட்டுரை ஒன்றை வரைந்துள்ளது.

உலகின் 10 சிறந்த உல்லாச பயணிகளுக்கான இடங்களில் இலங்கையினையும் உள்ளடக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உல்லாசப் பயணத் துறையினர் இந்த ஆண்டில் 7 இலட்சம் உல்லாசப் பயணிகள் இங்கு வருவர் என எதிர்பார்க்கின்றனர்.

இந்த எண்ணிக்கை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் 25 இலட்சம் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் வருகை தரும் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற வகையிலான அறைகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என அந்த கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி நாடளாவிய ரீதியாக 15ஆயிரம் அறைகளே இருப்பதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குறை பாட்டைத் தீர்க்க சம்பந்தப் பட்டவர்கள்உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் லண்டன் இண்டிபெண்டன் செய்தித்தான் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ)

# மரண அறிவித்தல்கள்

## உயர்திரு S.V.சந்திரசேகரம்



(முன்னாள் ஆசிரியர், இலங்கை துறைமுக அதிகாரசபை, சிரேஷ்ட அத்தியட்சகர், பருத்தித்துறை நகரசபை 2 ஆம் வட்டார உறுப்பினர், யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர், தாமரைக் குளத்தடி பொதுப் பணி மன்றத்தலைவர், பேச்சியம்மன் கோயில் தர்மகத்தா)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு S.V.சந்திரசேகரம் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகமாசி அம்மா, இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், மலர்விழி, கயல்விழி மாதவன், யசோதை, சாயிராம், ரமணா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணகுமார், லாவேரா, ரமேஷ், செல்லக்கொடி, பாலராணி, யோகேஸ்வரன், சிரேகா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிதரன், செல்வதரன், விஷ்ணு, ஹரிணி, துளசி, கால்யா, தர்சனாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மதக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:<br>
மனைவி, பிள்ளைகள்.<br>
மருமக்கள்.<br>
தொ.பே: 0714441751

கல்லூரி வீதி,<br>
பருத்தித்துறை.

(சி-1094)

## காசிப்பிள்ளை கனகசபை



இணுவில், மஞ்சத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கனகசபை நேற்று முன்தினம் (19.02.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், மூத்ததம்பி -சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திலகம்மா, சரஸ்வதி, குமாரசாமி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜோதிலிங்கம் (சுவிஸ்), அருந்ததி கணேசலிங்கம் (Sun city,யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி (Sun city,யாழ்ப்பாணம்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் சாந்தி(சுவிஸ்), முத்துலிங்கம் (M.S.K.தாவடி வர்த்தகர்),காலஞ்சென்ற நாகேந்திரராசா மற்றும் பேரின்பநாயகி, செல்வதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், கயல், கௌசிகா, நர்மிதா, சோதிகா (சுவிஸ்), ஆரணி, நித்தியானந்தா, தர்சிகா, சுபங்கரி, கீர்த்திகா, ஜெனகன், ஜெனனி, சுருதி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மைத்துனரும், சிவயோகத்தின் உடன்பிறவா சகோதரரும், சசிகரன் (SunCity,யாழ்ப்பாணம்), சசிகலா (ஜேர்மனி), காலஞ்சென்ற விசிகலா மற்றும் தயாகரன் (சுவிஸ்) வாறுதி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (20.02.2011) காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:<br>
க.கணேசலிங்கம்<br>
மகன்(Sun City)<br>
தொ.பே: 021 3008357

காரைக்கால் வீதி,<br>
மஞ்சத்தடி, இணுவில்.

(சி-1095)

# மரண அறிவித்தல்

## திருமதி இரஞ்சிதமலர் அபிமன்னன் (பெரியக்கா)



கோயில் வீதி, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதமலர் அபிமன்னன் அவர்கள் நேற்று முன்தினம் (19.02.2011) சனிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் சின்னத்துரை அபிமன்னனின் அன்பு மனைவியும் விஸ்ணுஜனின் அன்புத்தாயாரும், செல்லத்துரை - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராசமலர், நேசமலர் (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை), மோகனச்செல்வம் (தபாலகம், மல்லாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று(20.02.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயில் வீதி,<br>
மல்லாகம்.

தகவல்:<br>
எஸ்.மோகனச்செல்வம்(சகோதரன்)<br>
தொ.பே: 0770204129, 0213214925

(சி-1096)

# வாக்காளர் அட்டை விநியோகத்தை மேற்பார்வை செய்ய தபால் திணைக்களம் நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டை விநியோகத்தை மேற்பார்வை செய்ய தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த மேற்பார்வை திட்டம் அமுல்படுத்தப்படும் என பிரதித்தபால்மா அதிபர் ஆர். டி.வி. காமினி தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தல்களின் போது பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை இம்முறை வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கையில் ஈடுபடுத்தாது இருக்க தீர்மானித்துள்ளதாகவும் தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இம்முறை உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டை விநியோகத்தின்போது முறைகேடுகள் இடம்பெறுவதை தவிர்க்கும் வகையில் செயற்படுமாறு தபால் ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கையை மேற்பார்வை செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா 4 அதிகாரிகள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் தபால் நிலையங்களுக்கு சென்று வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவர்கள் என பிரதித் தபால் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். எவ்வித தடைகளும் இன்றி உரிய முறையில் வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கையில் 4 ஆயிரத்து 500 தபால் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-9)




வல்வை அ.மி.த.க. பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வல்வெட்டித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். சிறிகாந்தன் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதனையும் விருந்தினர்களுடன் மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

# பட்டப் பகலில் துப்பாக்கிச் சூடு!!!
## காலியில் இருவர் மரணம்

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று பட்டப் பகலில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஓட்டோ ஒன்றுக்குள் இருந்த இருவரை நோக்கி இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நடத்தினர்.

சுடப்பட்டவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்தார்.

மற்றவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொண்டிருந்த போது இடை வழியில் உயிரிழந்தார்.

(ஸ்ரீ)

# பிரபல பின்னணிப் பாடகர்
## மலேசியா வாசுதேவன் காலமானார்



பிரபல பின்னணிப் பாடகர் மலேசியா வாசுதேவன் தனது 70 ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் காலமாகியுள்ளார்.

அண்மைக்காலமாக சுகவீனமடைந்த நிலையில் சென்னை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று காலமாகியுள்ளார்.

பிரபல பின்னணிப் பாடகரான மலேசியா வாசுதேவன் கடந்த 25 ஆண்டுகளில் எட்டாயிரத்திற்கும் அதிகமான தமிழ்த் திரைப்பாடல்களைப் பாடியுள்ளார். பூங்காற்று திரும்புமா என் பாட்டை விரும்புமா, ஆசை நூறு வகை வாழ்வின் நூறுசுவை போன்ற ஏராளமான பாடல்களை பாடி ரசிகர்களை மகிழ்வித்துள்ளார். மேலும் இவர் முதல் வசந்தம், ஊமை விழிகள், திருடா திருடா உட்பட 85க்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். அத்துடன் இவர் தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார்.

இவரது மகன் யுகேந்திரன் பின்னணிப் பாடகராகவும் நடிகராகவும் இவரது மகள் பிரசாந்தினி பின்னணிப் பாடகியாகவும் உள்ளனர்.

(ஸ்ரீ)

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில்
## நிலக்கரி மூலம் மின் உற்பத்தி நடவடிக்கை

(கொழும்பு)

புத்தளம் நுரைச்சோலையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அனல் மின் நிலையத்துக்கு முழுமையாக நிலக்கரி எரிபொருளை பயன்படுத்தி மின்சார உற்பத்தியை மேற்கொள்ளும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த அனல் மின் நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் டீசல் எரிபொருளை பயன்படுத்தி பரிசீலிக்கப்பட்டது.

பின்னர் கிரமமாக நிலக்கரியை பயன்படுத்தி மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது நூறு சதவீத நிலக்கரியை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி வலுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை அங்கிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை தேசிய மின்சார விநியோக ஒன்றியத்துடன் இணைக்கும் நடவடிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதிலிருந்து 300 மெகாவோட் மின்சாரத்தை விநியோகிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனல் மின்நிலையத்திலிருந்து 315 மெகாவோட் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பினும் உற்பத்தி நிலையத்திலுள்ள நிலக்கரி உடைக்கும் இயந்திரம் மற்றும் குளிரூட்டல் கட்டமைப்பு என்பவற்றை இயக்க வைப்பதற்காக மின்சாரம் பயன்படுத்த வேண்டியுள்ளதால் 300 மெகாவோட் மின்சாரத்தை மாத்திரம் விநியோகிக்க முடியும்.

ஏனைய எரிபொருட்களை விட நிலக்கரியின் விலை குறைவாக இருப்பதன் காரணமாகவே அதனைக் கொண்டு மின் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும் சர்வதேச சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்து வருவதாக மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் 1 அலகு மின்சாரத்தை 6 ரூபா 40 சதத்துக்கு உற்பத்தி செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-9)

# வடக்கின் தனித்துவமான கலைமரபுகளை மீட்டும் "புலர்ந்தது புதுவசந்தம்"

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் பிற்பகல் 5.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் "புலந்தது புதுவந்தம்" நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வு வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமையவும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனின் வழிகாட்டலிலும் நடைபெறவுள்ளது.

வடமாகாண சபை தனது அலுவலக சேவையினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்திருக்கும் இவ்வாண்டிலே இங்கு வாழும் மக்களின் சமூக, பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருவதோடு வடக்கின் தனித்துவ மான கலை மரபுகளை மீட்டும் வளர்த்தும் எடுப்பதற்குமான சிந்தனையையும் மனதில் கொண்டு இந் நிகழ்வு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளதாக திணைக் களப்பணிப்பாளர் என். ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது 13 கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்படவுள்ள துடன் இதில் பரதம், நாடகம், கதகளி, வாத்திய பிருந்தா, மல்லாரி, நர்த்தனாஞ்சலி என பல நிகழ்வுகள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இடம் பெறவுள்ளன.

(ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டி

யா/ திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவன உரிமையாளர் இ.எஸ்.பி. நாகரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ஸ்ரீ-9)

# இலங்கையில் இனவாத அடிப்படையில் அரசியல் முன்னெடுக்கப்படுகிறது
## பேராசிரியர் நவரட்ன பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையில் இனவாத அடிப்படையில் அரசியல் முன்னெடுக்கப்படுவதாக பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் பேராசிரியர் நவரட்ன பண்டார தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் அனைத்து மக்கள் மனதிலும் இலங்கையர் என்ற உணர்வை ஏற்படுத்த முடியவில்லை எனவும் இதுவே பிரச்சினைகளுக்கான மூல காரணி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை ஆட்சி முறைமையின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியாது எனவும் 80 ஆம் ஆண்டு வரையில் வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் உரிய முறையில் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே வன்முறைகள் உருவானதாகவும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் மக்கள் சட்டம் ஒழுங்கை மீறிச் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ)

# பொலிஸ் கான்ஸ்டபிள் நீரில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

பட்டிப்பளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குளத்தில் குளித்த போது நீரில் மூழ்கி நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

ஜெயந்திபுரத்தைச் சேர்ந்தவரான ஜெயச்சந்திரன் பிரதீப் (வயது 21) என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவர்.

கடுக்காமுனை வில்லுக்குளத்தில் சக பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் குளித்துக் கொண்டிருந்த போது மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பட்டிப்பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பொலிஸ் கான்டபிளின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்த மாட்டான்..

*- முஹமது நபிகள்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பார்வதி அம்மாவின் மரணமும் எம் நெஞ்சுவிடு தூதும்

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதி அம்மா நேற்றுக் காலை காலமானார்.

வேலுப்பிள்ளையும் அவரது மனைவி பார்வதியும் வன்னி யுத்தத்தில் அகப்பட்டு முகாமில் தஞ்சமடைந்த வேளை, அவர்கள் இருவரையும் படையினர் சிறையில் தடுத்து வைக்க – அங்கு வேலுப்பிள்ளை மரணமடைய பார்வதி அம்மாவுக்கு விடுதலை கிடைத்தது.

ஆக, வேலுப்பிள்ளையின் மரணமே பார்வதி அம்மாவுக்கு விடுதலையைக் கொடுத்திருந்தது.

வேலுப்பிள்ளையின் மரணமே பார்வதி அம்மாவுக்கு விடுதலை கொடுத்தது என்பதை நினைக்கும் போது, எங்கள் தமிழினத்தில் தனிமனித வாழ்வின் சோகம் நெஞ்சை நெருடும்.

இந்நிலையில் பார்வதி அம்மா இந்தியாவுக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கு இந்திய அரசு மறுத்தமை மனித நேயத்திற்கு அந்நாடு வழங்கிய மதிப்பின் பெறுமானத்தை உணரவைத்தது.

காந்தியின் உண்ணாவிரதத்தைக் கண்டு பதறிப்போன ஆங்கிலேயர்களிடம் இருந்த மனிதாபிமானம் – ஆங்கிலேயர்களின் மனிதாபிமானத்தை அறிந்து அதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட பாரத தேசம், ஒரு வயோதிபத் தாயின் மருத்துவ சிகிச்சையில் வக்கிரபுத்தியோடு நடந்துகொண்டமை வேதனை தருவதாகும்.

பார்வதி அம்மா இந்தியாவில் சிகிச்சை பெறுவதன் மூலம் அவரின் பிள்ளைகளும் அவரைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் என்பதை ஒருபுறத்தே விடுத்து, 80 வயதையுடைய ஒரு வயோதிபத் தாயின் இறுதிக் காலத்தில் அவர் தனது பிள்ளைகளின் பராமரிப்பில் – அரவணைப்பில் இருந்து அந்திமத்தை அடைவதே நியாயம் என்பதை ஜனநாயக நாடுகள் உணரத் தவறிவிட்டன.

பார்வதி அம்மாவின் இறுதிக்காலம் வல்வெட்டித்துறை ஊறணி மருத்துவமனையில் கழிந்தது.

அவரைப் பராமரிப்பதில் அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் ஆற்றிய பணி உண்மையில் பாராட்டுக்குரியன.

இதற்கு மேலாக தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சுற்றுலா வந்த சிங்கள மக்களும் பார்வதி அம்மாவைச் சென்று பார்வையிட்டனர்.

பார்வையிட்ட சிங்கள மக்கள் பார்வதி அம்மாவைப் பெருமையாக நினைத்தனர்; அவரை மதித்தனர் என்ற செய்திகளை அறிந்தபோது நம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

பிரபாகரனோடு நின்று தங்கள் நலனைப் பாதுகாத்து, இலாபம் உழைத்து, போட வேண்டிய அண்டல்கள் எல்லாம் போட்டு, தங்களுக்கு விருப்பமில்லாதவர்களின் சீட்டுக்களைக் கிழித்து, பெரும் பதவிகளையும் பெற்ற எங்கள் பச்சோந்திகள் இன்று பிரபாகரனை எதிர்த்துப் பேசுவதோடு பக்கம் மாறி குதூகலமாக இருக்கும்போது, சிங்கள மக்கள் பார்வதி அம்மாவைப் பார்த்து, அவரை மதித்து இரு கரம் கூப்பி வணங்கினர் எனில் அவர்களிடம் இருக்கக் கூடிய இரக்கமும் மனிதநேயமும் அதிகமென்றே கூறலாம்.

# பார்வதி அம்மாளின் மறைவு சுரேஷ் அனுதாபச் செய்தி

(யாழ்ப்பாணம்)

வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள் அமரத்துவம் அடைந்த செய்தி தமிழ் மக்களை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களை ஈன்றெடுத்த கருவறை என்ற வகையில் ஈழத் தமிழர்கள் மாத்திரமல்லாமல் உலகத் தமிழர்கள் அனைவருமே பார்வதி அம்மாளை உணர்வு ரீதியாகத் தமக்கு நெருக்கமான ஓர் உறவாகவே கருதி வந்துள்ளனர்.

இவ்வாறு திருமதி வேலுப்பிள்ளை பார்வதியம்மாளின் மறைவு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்கால் முற்றுகைக்குள் இருந்து விடுபட்டு வவுனியா நலன்புரி முகாமில் பார்வதி அம்மாள், தனது கணவர் அமரர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களுடன் தங்கியிருந்த வேளை பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டு இருவரும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தனர். தடுப்புக் காவலில் இருந்த சமயம் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் உயிரிழந்ததை அடுத்து பார்வதி அம்மாளை அரசு விடுதலை செய்திருந்தது.

எனினும் வெளிநாடுகளில் வதியும் அவரது பிள்ளைகளுடன் அவர் இணைந்து வாழ்வதற்கு அந்நாடுகளின் சட்டங்கள் குறுக்காக நின்றன. இதனால் பார்வதியம்மாள் நோயுற்றிருந்த நிலையில் தனது கடைசிக் காலத்தை வல்வெட்டித்துறை மருத்துவமனைகளிலேயே கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உலகத் தமிழர்கள் அனைவரது ஆதரவு இருந்தும் பார்வதி அம்மாள் இவ்வாறு தனித்து விடப்பட்டமை ஒரு வரலாற்றுத் துயரமே.

அன்னாரின் மறைவினால் துயருறும் தமிழ் மக்களில் நானும் ஒருவனாக எனது வேதனையைப் பகிர்ந்து கொள்கின்றேன். ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாகத் தன்னாட்சி உரிமையைப் பெறுவதும் அதை நோக்கி உழைப்பதுமே அன்னாருக்கு நாம் செய்யும் அஞ்சலியாக அமையும். (ந)

# ப.நோ.கூ.சங்க ஊழலுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

## தடுத்து நிறுத்தியது இராணுவம்

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி ப.நோ.கூ.சங்க ஊழலைக் கண்டித்து மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ரீதியான உண்ணாவிரதப் போராட்டத்தில் இராணுவத்தினர் தலையிட்டு அடாவடித்தனமாகச் செயற்பட்டுள்ளனர். இவ்வாறான படையினரின் அடாவடித்தனத்தை வன்மையாகக் கண்டிப்பதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்களுக்கு எதிராக வவுனியா புளியங்குளம் கோப்சிற்றிக்கு முன்னால் இரண்டு நாட்களாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கென இடப்பட்டிருந்த கொட்டில்களை அகற்றுமாறும் கட்டியிருந்த பதாகையை அகற்றுமாறும் போராட்டக்காரர்களை இராணுவத்தினர் வற்புறுத்தினர் என்றும் இதற்கு அவர்கள் உடன்படாததை அடுத்து இராணுவத்தினரால் கொட்டில்கள் மற்றும் பதாகைகள் பிடுங்கி வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனை நேரில் சென்று பார்வையிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் ஜனநாயக முறையிலேயே செயற்பட்டனர். எந்த வகையிலும் எவருக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இராணுவத்தினரின் செயலானது காட்டுமிராண்டித்தனமானதும் கண்டிக்கத்தக்கதுமாகும் என்றார்.

இவ்விடயம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெலவிடம் கேட்டபோது, தனக்கு இச் சம்பவம் தொடர்பாக எதுவிதமான தகவல்களும் இதுவரையில் கிடைக்கவில்லை எனப் பதிலளித்துள்ளார். (ந-5)

# இரட்டைப் பிரஜாவுரிமை எவரையும் பாதிக்காது குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தகவல்

இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கைகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளதுடன் அரசுக்கும் பிரஜாவுரிமை பெறுபவர்களுக்கும் அதிகளவு நன்மை கிடைக்கும் வகையில் இந்நடைமுறையை எதிர்காலத்தில் மேம்படுத்தும் வேலைகளை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இப்புதிய நடவடிக்கை மூலம் புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களும் மேலும் நன்மையடைவார்களே தவிர எவ்விதத்திலும் பாதிக்கமாட்டார்கள் என திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாட்டை குடிவரவு குடியகல்வு திணைக்களம் இடைநிறுத்தி வைத்துள்ளது. அங்கீகாரம் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக வெளிவந்துள்ள செய்தியை முற்றாக நிராகரித்த அவர், இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாட்டை மேம்படுத்துவது தொடர்பில் திணைக்களம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது எனத் தெரிவித்தார்.

இச்செயற்பாட்டை தற்போதைய காலத்துக்கு ஏற்றாற்போல மேம்படுத்தப்பட வேண்டியதன் தேவை குறித்தும் ஆராய்ந்து வருகிறோம். இரட்டைப் பிரஜாவுரிமை பெறுபவர்கள் மேலும் நன்மையடையும் விதத்திலும் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதால் இலங்கைக்கு மேலும் நன்மை கிடைக்கும் விதத்திலும் விரைவில் திணைக்களம் பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாட்டை மீண்டும் அறிமுகம் செய்யவிருக்கிறது.

இது தொடர்பாகத் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாகவும் விரைவில் அறிந்துகொள்ள முடியும். இரட்டைப் பிரஜாவுரிமை பெறும் ஒருவரிடமிருந்து இலங்கை அரசாங்கம் இரண்டு இலட்சம் ரூபாயைக் கட்டணமாக அறவிட்டு வந்தது.

அவ்வாறான கட்டணங்கள் இலங்கைக்கு பொருளாதார நலனைப் பெற்றுத் தந்ததாகவும் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து, பிரிட்டன், ஸ்விட்சர்லாந்து, இத்தாலி, ஸ்வீடன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பிரஜாவுரிமைகளைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழர்களும் இரட்டைப் பிரஜாவுரிமை திட்டத்தின் கீழ் இலங்கையிலும் பிரஜாவுரிமை பெற்று வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



முழுமையான ஆன்மா, தான் முழுமையற்றது என்ற நம்பிக்கையில் எவ்வாறு மயங்கிவிட முடியும்? இத்தகைய கேள்விக்கு இங்கு இடமில்லை என்று கூறி, இந்துக்கள் இதைத் தட்டிக் கழிப்பதாகச் சொல்லப்படுகிறது. சில சிந்தனையாளர்கள், முழுமை நிலைக்குச் சற்றுக் கீழே இருக்கின்ற, ஆனால் முழுமை பெறாத பல தெய்வங்களைக் கூறி, பெரிய பெரிய சொற்களால் இடைவெளியை நிரப்ப முயற்சி செய்வதன் மூலம் இதற்கு விடை காண விரும்புகிறார்கள். ஆனால் பெரிய சொற்களைக் கூறுவது விளக்கமாகி விடாது. கேள்வி அப்படியேதான் இருக்கிறது. முழுமையான ஒன்று முழுமை நிலையிலிருந்து எப்படிக் கீழே வரமுடியும்? தூய்மையானதும் முழுமையானதுமான பொருள் தன் இயல்பை எப்படி அணுவளவேனும் மாற்றிக் கொள்ளமுடியும்?

# உலகக் கிண்ண கிரிக்கெட்

திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

## மியண்டட்டின் சாதனையை சமப்படுத்தினார் சச்சின்


உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுத் தொடர்களில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் ஜாவிட் மியண்டட் படைத்திருந்த சாதனையொன்றை இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் சமப்படுத்தினார்.

தொடர்ச்சியாக 6 உலகக் கிண்ணச் சுற்றுத் தொடர்களில் ஜாவிட் மியண்டட் விளையாடிய சாதனையையே டெண்டுல்கர் சமப்படுத்தியுள்ளார்.

1989ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்த சச்சின் டெண்டுல்கர் 1992ஆம் ஆண்டு தனது முதல் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடினார். அது ஜாவிட் மியண்டட்டின் 5ஆவது உலகக் கிண்ணத் தொடராகும். அத்தொடரில் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

அதன்பின் 1996, 1999, 2003, 2007 ஆகிய வருடங்களில் நடந்த உலகக் கிண்ணத் தொடர்களில் விளையாடிய டெண்டுல்கர் 2011ஆம் ஆண்டு தனது 6ஆவது உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுகிறார். நேற்று முன்தினம் நடந்த போட்டி டெண்டுல்கரின் 445 ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியாகும்.

## சிக்ஸ்... கோல் இரண்டும் தூள்



மேற்கிந்தியத் தீவுகள் அணி ஜாம்பவான் விவியன்ரிச்சர்ட்ஸுக்கு ஒரு விசேட பெருமை உண்டு.

உலகக் கிண்ண கிரிக்கெட், உலகக் கிண்ணக் காற்பந்து என்று இரு பெரிய களங்களிலும் விளையாடிய ஒரே வீரர் ரிச்சர்ட்ஸ் மட்டுமே.

அன்டிகுவா அணிக்காக உலகக் கிண்ணக் காற்பந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக உலகக் கிண்ண கிரிக்கெட் விளையாடி இருக்கிறார்.

## இஷ்டம் போல விளையாடுங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நான்கு காலிறுதிப் போட்டிகளில் பங்களாதேஷில் இரண்டும் இலங்கை மற்றும் இந்தியாவில் தலா ஒரு போட்டியும் நடக்கின்றன.

'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள இலங்கை, காலிறுதிப் போட்டியைத் தமது மண்ணில் (கொழும்பு) விளையாட வேண்டுமானால், இந்தப் பிரிவில் நான்காவது இடம் பிடிக்க வேண்டும்.

காரணம் 'ஏ' பிரிவில் முதலாவது, மூன்றாவது இடம்பிடிக்கும் அணிகள் பங்களாதேஷிலும் இரண்டாவது இடம்பிடிக்கும் அணி இந்தியாவிலும் விளையாட வேண்டுமென முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது.


இதை மனதில் வைத்துக் கணக்குப் போட்டு விளையாட வேண்டிய அவசியம் இனி இல்லை. ஐ.சி.சி. தற்போது வெளியிட்ட அறிவிப்பில்,

உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்தும் நாடுகள், காலிறுதிக்குத் தகுதிபெற்றால் தமது சொந்த மண்ணிலேயே விளையாடலாம். ஒருவேளை இலங்கை - இந்தியா, இலங்கை - பங்களாதேஷ் என காலிறுதியில் அணிகள் மோதும் சிக்கல் ஏற்பட்டால், அந்த அணிகளின் லீக் சுற்று வெற்றி அடிப்படையில் போட்டி நடைபெறும் இடம் தீர்மானிக்கப்படும்.

இதன்மூலம் பட்டியலில் தங்கள் இடத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அணிகள் விளையாடலாம் என ஐ.சி.சி. தலைமை நிறைவேற்று அதிகாரி ஹாருன் யார்கெட் தெரிவித்துள்ளார்.

## 'அனைத்து வீரர்களும் சிறப்பாகச் செயற்படுங்கள்'

### அப்ரிடி வேண்டுகோள்



(கராச்சி) 'உலகக் கிண்ணத் தொடரில் அனைத்து வீரர்களும் சிறப்பாகச் செயற்பட வேண்டும்' என பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகக் கிண்ணப் பயிற்சி போட்டியில் பாகிஸ்தான் அணி, இங்கிலாந்திடம் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.


இதுகுறித்து அப்ரிடி கூறியதாவது,

இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் தோல்வியடைந்தது வருத்தம் தருகிறது. இதற்காக நாம் மன்னிப்புக் கேட்பது முதல் முறையல்ல.

இது தொடரக்கூடாது. அணியின் அனைத்து வீரர்களும் உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ந்து சிறப்பான திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

சோதனை செய்து பார்ப்பதற்கு இனி நேரமில்லை. மூத்த வீரர்கள் உட்பட அனைவரும் பொறுப்பெடுத்துச் செயற்பட வேண்டும். 'அக்தரிடம் ஊக்கமருந்துச் சோதனை நடத்தப்பட்டது வழக்கமான ஒன்றுதான். ஐ.சி.சி எந்த அணியிடமும், யாரிடம் வேண்டுமானாலும் சோதனைநடத்தும்' என்றார். இதேவேளை பாகிஸ்தான் அணி தனது முதலாவது போட்டியில் கென்ய அணியை நாளை மறுதினம் சந்திக்கிறது.

## மைதானங்கள் ஒரு பார்வை



கொழும்பில் அமைந்துள்ள ஆர்.பிரேமதாசா விளையாட்டரங்கில் 35 ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்திருந்து போட்டியைக் கண்டு களிக்க முடியும். உலகக் கிண்ணத் தொடருக்காக மைதானம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இங்கு இத்தொடரில் 5 லீக் போட்டிகள் உட்பட தலா ஒரு காலிறுதி, அரையிறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

### ஆர்.பிரேமதாசா விளையாட்டரங்கு (கொழும்பு)

## கருத்துக் களம்

### எவ்வளவோ பார்த்து விட்டோம்

**பிரெட் லீ**



அவுஸ்திரேலிய அணியில் நான், ஷோன் தைட், மிட்செல் ஜோன்சன், போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களுக்கு இந்திய ஆடுகளங்கள் அவ்வளவாக ஒத்துழைக்காது என்ற வாதத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை.

இந்திய ஆடுகளங்களில் இதற்கு முன் எவ்வளவோ விளையாடியிருக்கிறோம்.

சுழலுக்கு கைகொடுக்குமென நம்பப்படுகிற இந்தக் களங்களில், வேகப்பந்து வீச்சு மூலமே சாதித்திருக்கிறோம். இந்த உலகக் கிண்ணத் தொடரிலும் சாதிப்போம்.

### 350 எடுத்தால் ஓ.கே.

**மத்யூ ஹைடன்**



இருபது-20 வந்த பின்னர் கிரிக்கெட்டின் முகமே மாறிவிட்டது. ஆளாளுக்கு விளாசித் தள்ளுகிறார்கள்.

அதுவும் இந்தியத் துணைக்கண்டத்தில் நடக்கிற போட்டி என்றால், கேட்கவே வேண்டாம்.

300 ஓட்டங்கள் சாதாரணமாக எடுக்கலாம். முதலில் துடுப்பெடுத்தாடும் அணி 350 ஓட்டங்கள் எடுத்தால்தான், தைரியமாகப் பந்து வீச முடியும்.

### சொன்னதைச் செய்தோம்

**சேவாக்**



பங்களாதேஷ் அணியுடனான முதலாவது லீக் போட்டியில் 175 ஓட்டங்கள் குவித்து ஆட்டநாயகனாகத் தெரிவான சேவாக் கூறுகையில்,

உலகக் கிண்ணத் தொடரை நாங்கள் சிறப்பாக ஆரம்பித்துள்ளோம். இது எங்களுக்குப் பழிவாங்கும் ஆட்டம் என்று தெரிவித்திருந்தேன். அதன்படியே நாங்கள் பங்களாதேஷை வீழ்த்தியிருக்கிறோம்.

பங்களாதேஷ் ஒருநாள் கிரிக்கெட்டில் கடும் சவால் அளிக்கக் கூடியது என்று குறிப்பிட்டிருந்தேன். இதனால் நாங்கள் அவர்களை வெல்லச் சிறப்பாக ஆடவேண்டியிருந்தது. அதனைச் செய்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

### சம்பியன் ஆகனுமா? சச்சின் நிற்க வேண்டும்

**வசீம் அக்ரம்**



இம்முறை உலகக் கிண்ணத்தை ஜெயிக்க இந்திய அணிக்கு அதிக வாய்ப்பிருக்கிறது என்று முதலில் கூறியது நான்தான். இப்போது பாருங்கள்... ஆளாளுக்கு நான் சொன்னதைத்தான் திரும்பச் சொல்கிறார்கள்.

காரணம் ரொம்பச் சுலபம்... திறமை, தன்னம்பிக்கை என அனைத்து விதத்திலும் இந்திய அணிதான் இப்போது முதல்வன்.

இவ்வாறு ஆணித்தரமாக அடித்துச் சொல்பவர், இந்திய அணியின் தேர்வுக் குழுத் தலைவர் சிறிகாந்த் அல்ல... பாகிஸ்தான் ஜாம்பவான் வசீம் அக்ரம்.

அதோடு விடவில்லை. 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர், இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தை ஜெயிக்க இந்திய அணிக்கு இது அற்புதமான சந்தர்ப்பம்.

இந்திய அணி இம்முறை சம்பியனாகிறது என்றால், சச்சின் டெண்டுல்கரின் பங்கு அதில் மிக முக்கியமானதாக இருக்கும். அவர் களத்தில் நீண்ட நேரம் நிற்க வேண்டியது அவசியம்.

குறைந்தது 40 ஓவர்களாவது அவர் நின்றால் காம்பீர், கோலி, யுவராஜ் என அடுத்து வருபவர்கள் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தலாம்.

ஓட்ட எண்ணிக்கையும் எகிறிவிடும். சச்சின் மட்டும் நின்று விளையாடினால் இந்தியாதான் சம்பியன் என்கிறார் உறுதியாக.

# மஹேல சதம்: சங்கா அபாரம் இலங்கை வலுவான ஆரம்பம்



(அம்பாந்தோட்டை)

மஹேல ஜெயவர்த்தனவின் அதிரடிச் சதம் கைகொடுக்க இலங்கை அணி 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கனடா அணியை வீழ்த்தியது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற 3ஆவது லீக் போட்டியில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த இலங்கை-கனடா அணிகள் மோதின.

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க – டில்சான் ஜோடி பொறுப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இதில் உபுல் தரங்க 31 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 19 ஓட்டங்களை எடுத்தபோது ரன்–அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் குமார் சங்கக்கார நிதானமான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் திலகரட்ண டில்சான் 58 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

எனினும் டில்சான் 59 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களை எடுத்து சீமாவின் பந்துவீச்சில் டேவிசனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க, இலங்கை அணி 19.1 ஓவர்களில் 88 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

**வந்தார் மஹேல**

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தன அதிரடி ஆட்டத்தினை வழங்க இலங்கை அணி 21.4 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தாண்டியது.

இதில் மஹேல ஜெயவர்த்தன 40 பந்துகளிலும் அணித்தலைவர் சங்கக்கார 61 பந்துகளிலும் அரைச்சதம் கடந்து நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 22.5 ஓவர்களில் 179 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது அணித்தலைவர் குமார் சங்கக்கார 87 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 92 ஓட்டங்களை எடுத்து டேவிசனின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து திஷார பெரேரா களமிறங்க மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தன 80 பந்துகளில் தனது 3ஆவது உலகக் கிண்ணச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

எனினும் மஹேல ஜெயவர்த்தன 81 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 100 ஓட்டங்களைக் குவித்து டேவிசனின் பந்துவீச்சில் பாலாஜி ராஜிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய மத்யூஸ், சமரவீர தமது பங்கிற்குச் சிறப்பாக ஆட இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களைக் குவித்தது. இதில் அஞ்சலோ மத்யூஸ் 21 ஓட்டங்களையும் சமரவீர ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பாய்ட்வான், டேவிசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சீமா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 333 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கனடா அணியை ஆரம்பத்திலேயே பெரேரா – குலசேகரா கூட்டணி மிரட்டியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குணசேகர (1), டேவிசன் (0), சுகாரி (6) என வரிசையாக வெளியேற கனடா அணி 4 ஓவர்களில் 12 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. அடுத்து இணைந்த ஹான்ஸ்ரா–பாகாஜ் ஜோடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது.

எனினும் ஹான் ஸ்ரா 49 பந்துகளில் 9 ஓட்டங்களை எடுத்தபோது சமரவீரவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் சங்கக்காரவினால் ஸ்டம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சீமா அதிரடி காட்ட மறுமுனையில் அணித்தலைவர் பாகாஜ் 22, கோர்டன் 4, சொகான் 4 ஓட்டங்களுடன் வெளியேற கனடா அணி 36.5 ஓவர்களில் 122 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இலங்கை அணி தொடரில் 2 புள்ளிகளைப் பதிவுசெய்தது.

இதில் ரிஷ்வான் சீமா 35 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 37 ஓட்டங்களையும் பாய்ட்வான் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் றுவான் குலசேகர, திஷார பெரேரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் மெண்டிஸ், சமரவீர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்குச் சதமடித்துக் கைகொடுத்த மஹேல ஜெயவர்த்தன ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# உலகக்கிண்ணத் துளிகள்...

**டில்சான் '5000'**

நேற்று அரைச்சதம் கடந்த இலங்கை வீரர் டில்சான் 44ஆவது ஓட்டத்தை எடுத்தபோது ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 5 ஆயிரம் ஓட்டங்கள் என்ற புதிய மைல் கல்லை அடைந்தார். இதன்மூலம் இச்சாதனை படைத்த எட்டாவது இலங்கை வீரர் மற்றும் 59ஆவது சர்வதேச வீரர் என்ற பெருமை பெற்றார்.

**அதிவேக ஜெயவர்த்தன**

அதிரடியாக ஆடிய மஹேல ஜெயவர்த்தன 80 பந்தில் சதமடித்தார். இது உலகக் கிண்ண அரங்கில் பதிவு செய்யப்பட்ட 5ஆவது அதிவேக சதம். முன்னதாக ஜெயசூர்யா (86 பந்துகள்), அரவிந்த டி சில்வா (92 பந்துகள்) உள்ளிட்ட இலங்கை வீரர்கள் இச்சாதனை படைத்திருந்தனர்.

இவ்வரிசையில் முதல் ஐந்து வீரர்கள்:

| வீரர் | பந்துகள் | ஓட்டங்கள் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|---|---|
| ஹைடன் (ஆஸி.) | 66 | 101 | தென்னாபிரிக்கா | 2007 |
| டேவிசன் (கனடா) | 67 | 111 | மேற்கிந்தியத் தீவுகள் | 2003 |
| கபில்தேவ் (இந்தியா) | 72 | 175* | சிம்பாவே | 1983 |
| கில்கிறிஸ்ட் (ஆஸி.) | 72 | 149 | இலங்கை | 2007 |
| ஜெயவர்த்தன (இலங்கை) | 80 | 100 | கனடா | 2011 |

**ஆறாவது முறை**

கனடா அணிக்கு எதிராக 7 விக்கெட்டுக்களிற்கு 332 ஓட்டங்களைக் குவித்த இலங்கை அணி உலகக் கிண்ண அரங்கில் 6ஆவது முறையாக 300 ஓட்டங்களிற்கு மேல் எடுத்தது. இது உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் இரண்டாவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை. முன்னதாக கடந்த 1996இல் கென்யாவுக்கு எதிராக 5 விக்கெட்டுக்களிற்கு 398 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இலங்கை அணியின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை:

| ஓட்டங்கள் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|
| 398/5 | கென்யா | 1996 |
| 332/7 | கனடா | 2011 |
| 321/6 | பெர்முடா | 2007 |
| 318/4 | பங்களாதேஷ் | 2007 |
| 313/7 | சிம்பாவே | 1992 |
| 303/5 | மேற்கிந்தியத் தீவுகள் | 2007 |

**பிரமாண்ட வெற்றி**

கனடா அணியை 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இலங்கை அணி உலகக் கிண்ண அரங்கில் தனது 2ஆவது சிறந்த வெற்றியைப் பதிவு செய்தது. கடந்த 2007இல் பெர்முடாவுக்கு எதிரான போட்டியில் 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இது உலகக் கிண்ணத் தொடரில் 7ஆவது பிரமாண்ட வெற்றி.

இவ்வரிசையில் முதல் 8 அணிகள் வருமாறு:

| அணி | ஓட்டங்கள் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|---|
| இந்தியா | 257 | பெர்முடா | 2007 |
| அவுஸ்திரேலியா | 256 | நமீபியா | 2003 |
| இலங்கை | 243 | பெர்முடா | 2007 |
| அவுஸ்திரேலியா | 229 | நெதர்லாந்து | 2007 |
| தென்னாபிரிக்கா | 221 | நெதர்லாந்து | 2007 |
| அவுஸ்திரேலியா | 215 | நியூசிலாந்து | 2007 |
| இலங்கை | 210 | கனடா | 2011 |
| அவுஸ்திரேலியா | 203 | ஸ்கொட்லாந்து | 2007 |

**அக்ரம் சாதனை சமன்**

நேற்று இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்திய இலங்கை சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், உலகக் கிண்ண அரங்கில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தை முன்னாள் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரமுடன் பகிர்ந்துகொண்டார்.

இவர்கள் இருவரும் தலா 55 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளனர். முதலிடத்தில் முன்னாள் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் (71 விக்கெட்டுக்கள்) உள்ளார்.

இவ்வரிசையில் முதல் ஐந்து பந்துவீச்சாளர்கள் வருமாறு:

| வீரர் | போட்டி | விக்கெட் |
|---|---|---|
| மெக்ராத் (ஆஸி) | 39 | 71 |
| முரளிதரன் (இலங்கை) | 32 | 55 |
| அக்ரம் (பாக்.) | 38 | 55 |
| வாஸ் (இலங்கை) | 31 | 49 |
| ஸ்ரீநாத் (இந்தியா) | 34 | 44 |

## நாளைய ஆட்டம்

நாக்பூர்

நெதர்லாந்து - இங்கிலாந்து

# கிழக்கிற்கு பொலிஸ் ஆணைக் குழு? மாகாணசபையில் பிரேரணை வருகிறது

(கொழும்பு)

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்திற்கான மாகாண பொலிஸ் ஆணைக்குழு அமைப்பது தொடர்பிலான பிரேரணையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

இதுதொடர்பானபிரேரணையொன்றுகிழக்கு மாகாண சபையில் விரைவில் நிறைவேற்றப்பட்டு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணைக்குழுவிற்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைவராகச் செயற்படுவார்.

ஜனாதிபதி மற்றும் மாகாண முதலமைச்சர் ஆகியோரால் தலா ஒருவர் இந்த ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்.

இந்த மாகாண பொலிஸ் ஆணைக்குழு மாகாணத்திலுள்ள பொலிஸாரின் இடமாற்றங்கள், பதிவியுயர்வுகள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் போன்றவற்றிற்கு பொறுப்பாகச் செயற்படும்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவை இதுவரை வழங்கப்படவில்லை. (ந-5)

# கண்டாவளை மகா வித்திக்கு அமைச்சர் டக்ளஸ் உதவி

(கிளிநொச்சி)

கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு ஆறுலட்சம்ரூபாபெறுமதியானதளபாடங்களையும், ஐயாயிரம் கொப்பிகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு நேரில் சென்று வழங்கினார்.

கண்டாவளை மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திருமதி ம.கோமதி தலைமையில் நடைபெற்ற நிகழ்விலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி பொருட்களை அதிபரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராஜா, கண்டாவளை பிரதேச செயலர், நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளரும் இப் பாடசாலையின் முன்னாள் அதிபருமான எஸ்.மாணிக்கராஜா, கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.இராஜகுலசிங்கம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

கண்டாவளை மகாவித்தியாலயத்தின் கட்டிடத் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்து தரப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது உரையின் போது தெரிவித்தார். (ந)

# திருமாவளவன்...

அம்மாளின் இறுதிச் சடங்கு நாளை வல்வெட்டித்துறையில் நடைபெறும் போது தொல். திருமாவளவன் அதில் கலந்துகொள்வார்.

அமரர் வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கிலும் திருமாவளவன் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# பிரபாகரனின் தாயார்...

அஞ்சலிக்காக பூதவுடல் தீருவில் தூபித்திடலில் வைக்கப்பட்டிருக்கும்.

நாளை முற்பகல் 11 மணிக்கு வல்வெட்டித்துறை ஆலடி ஒழுங்கையிலுள்ள அவரின் மகளின் வீட்டில் பூதவுடல் வைக்கப்பட்டு பின்னர் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை ஊரணி பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது ஊரணி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பூதவுடலுக்கு பெருமளவு பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்திவருகின்றனர். வல்வெட்டித்துறையில் இவரது மறைவையொட்டி கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

பார்வதியம்மாளின் மறைவையொட்டி புலம்பெயர் அமைப்புகளும் தமிழகத்தின் ஈழ ஆதரவு தலைவர்களும் தமது இரங்கலை தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் நினைவு வணக்க நிகழ்வுகளும் ஏற்பாடாகிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று எம்.ஜி.ஆர். நகரில் பெரியார் திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் அமைதி ஊர்வலம் இடம்பெற்றது. இதே போன்று கோவை நகரிலும் சீமான் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளன.

பார்வதி அம்மாளின் கணவர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை பனாகொடை இராணுவ தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த போது 2010 ஜனவரியில் மரணமடைந்தார்.

அவரின் மரணத்தையடுத்து விடுதலை செய்யப்பட்ட பார்வதி அம்மாள் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக மலேசியா செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார். இருந்த போதிலும் அங்கிருந்து தமிழகத்திற்கு மருத்துவ சிகிச்சைக்காக செல்ல முற்பட்டபோது விசா நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

இதனையடுத்து அவரின் சொந்த இடமான வல்வெட்டித்துறை மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாளின் நேரடிக் கவனிப்பில் பராமரிக்கப்பட்டு வந்தார். (ந-5)

# பொன்சேகாவை...

கப்படுமாயின் சரத் பொன்சேகா அக்கட்சியில் இணைந்து கொள்வார் என பொன்சேகா சார்பாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட தரப்பினர் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை உட்பட உயர் நிலைப் பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

பேச்சுவார்த்தையின் போது பொன்சேகா தரப்பினர் நிபந்தனை ஒன்றை முன்வைத்திருப்பதாகவும் அந் நிபந்தனைக்கு ஐ.தே.க உடன்படுமாயின் பொன்சேகா அக்கட்சியில் இணைந்து கொள்வது உறுதியாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிபந்தனை குறித்து இரு தரப்பினரும் கருத்து வெளியிடவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தையில் பொன்சேகா தரப்பில் அர்ஜுன ரணதுங்க மற்றும் சில உறுப்பினர்களும் ஐ.தே.கவில் ரணில் விக்கிரமசிங்க சார்பாக கரு ஜெயசூரிய, மங்கள சமரவீர உள்ளிட்டோரும் பங்குபற்றியிருப்பதாக தெரியவருகிறது. (ந-5)

# யாழ்ப்பாணம், கிளிநொ...

இதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 16 சபைகளும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 சபைகளுக்குமான தேர்தல்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எனினும் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்ற தீர்ப்பேதும் சாதகமாகக் கிடைக்கும் பட்சத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களை வழமை போன்று நடத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# மரண அறிவித்தல்

## இராசையா பொன்னம்பலம்



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் சின்னாலடி தங்கோடையை வசிப்பிடமாகவும் தற்போது இல.815, சிவலிங்கப் புளியடி, K.K.S வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற மாவட்ட வன அதிகாரியும், அரசாங்க மரக்கூட்டுத்தாபன செயற்பாட்டு முகாமையாளருமான இராசையா பொன்னம்பலம் 20.02.2011 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் இராசையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், சின்னாலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் நடராசா, சீதேவிப்பிள்ளை (சின்னன்) தம்பதியினரின் மருமகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், அமரர்களான மகாதேவன், செல்லத்துரை, கமலாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரனும், அமரர்களான வாலாம்பிகை, தேவராஜா ஆகியோரின் அருமை மைத்துனரும்,விஜலட்சுமி,நடராஜா (நிர்வாக உத்தியோகத்தர் ICRC கொழும்பு),சிவானந்தராஜா (அதிபர், கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்) நாகரத்தினராஜா (கணக்காளர், அவுஸ்திரேலியா ), இராமகிருஷ்ணராஜா (பிரதம முகாமைத்துவ உதவியாளர், அரச மரக்கூட்டுத்தாபனம் யாழ்.), நாகபூசனி(ஆசிரியை, ஸ்ரீ கணேசா தமிழ் வித்தியாலயம்,பசறை)ஆகியோரின் அருமைத் தந்தையும், சாம்பசிவம் (பிரதித் திட்டப் பணிப்பாளர் NELSIP), கங்காதேவி, இராஜேஸ்வரி, கண்ணம்மா(அவுஸ்திரேலியா), தர்மகுமாரி, பஞ்சலிங்கம் (ஆசிரியர்,பசறை தமிழ் மகா வித்தியாலயம்), தில்லைராஜா (புதூர் சந்தி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

சுதர்சன், பத்மபிரியா, சிவகாந்தன், ஸ்ரீசங்கர், ஸ்ரீகோகுலன், திருமகள், பிரசன்னா, பிரசாத், பிரவீன், சிவபிருந்தன், சிவவதனி, பிரகாஷ், தருண், வரனிதா, உதயபவன், கஜவதனன், கஜவதனி, ஜிவானி ஆகியோரின் அருமைப் பேரனும், அக்ஷயனின் அருமைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.02.2011 இன்று திங்கட்கிழமை இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணிக்கு பூதவுடல் கோம்பயன் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.815, சிவலிங்கப்புளியடி K.K.S. வீதி,**
**யாழ்ப்பாணம்,**

தகவல்:-
**நாகம்மா (மனைவி) (0212225868)**

(3852)

# உள்நாட்டு, வெளி...

இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்த சில சக்திகள் முனைப்புக் காட்டி வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழில்சார் நிபுணர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது தொழில்சார் நிபுணர்களின் முக்கிய கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்த ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்ற வலுவான நிலைப் பாட்டை படையினர் தகர்த்தெறிந்துள்ளனர்.

எனினும் யுத்தம் நிறைவடைந்து விட்டது. இனி நாட்டில் பிரச்சினை இல்லை என எவரும் நினைத்துவிடக் கூடாது.

சர்வதேச ரீதியில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார். (ந-5)

# நாடுகடந்த தமிழீழ...

கட்டணமாக செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

உருத்திரகுமாரனுக்கு எதிரான அமைப்புகளைவிடவும் தம்மை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு நிதி திரட்டப்படுவதாக இலங்கை புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் உருத்திரகுமாரனின் இந்த திட்டத்தினால் புலம்பெயர்தமிழர்களுக்குஇடையில்மேலும் பிளவுஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடுகடந்த தமிழீழ இராச்சியத்தினால் விநியோகம் செய்யப்படும் அடையாள அட்டைகளில் பல்வேறு மோசடிகள் இடம் பெறக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ந-5)

**வீடு வாடகைக்கு தேவை**

அரச சேவை ஆற்றும் சிறிய குடும்பமொன்றுக்கு கொக்குவில், தாவடி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு:0771751380 (இ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.